Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

APR 2004

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 14 (05.04.2004) திங்கட்கிழமை இதழ்:187

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

| WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம் |
|---|---|---|

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P:0602212472

(சி/2228)

## புலிகளே ஏகபிரதிநிதிகள் என்பதை தேர்தலில் மக்கள் நிரூபித்துள்ளனர்!

### விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நன்றி தெரிவித்து அறிக்கை

(கிளிநொச்சி)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இரத்தம் சிந்தி, உயிர் விலை கொடுத்து, பெரும் தியாகங்கள் புரிந்து - பெரும் இராணுவ வெற்றிகளைக் குவித்து, தீர்க்கமான வரலாற்றுக் கட்டத்தை அடைந்துள்ள எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும், அதனை தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நடைபெற்ற தேர்தலில் தமிழ்மக்கள் தமது தார்மீக ஆதரவை மீள உறுதிப்படுத்தி, எமது போராட்ட முன்னெடுப்புக்கு தமது ஒட்டுமொத்த ஆதரவை வழங்கி ஆற்றிய வரலாற்றுப் பணி மகத்தானது என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ்த் தேசிய உணர்வுடனும், மிகுந்த பொறுப்புணர்வுடனும் தமிழ் மக்கள் எந்தவிதமான சிரமங்களையும் பொருட்படுத்தாது, கொளுத்தும் வெயிலில் நீண்டநேரம் வரிசையாக நின்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஒருமித்து ஒற்றுமையாக தமது வாக்குகளைச் செலுத்தி, அதற்கு மகத்தான வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்து, சர்வதேச சமூகத்துக்கும் சிங்கள தேசத்திற்கும் பகிரங்கமாக பெரும் செய்தியைச் சொல்லியுள்ளார்கள்.

மீண்டும் இந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை தமிழீழ மக்களின் தேசியத் தலைமையாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் உண்மையான ஏகப்பிரதிகள் என்பதை உலகிற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவை நோக்கி இன்று 'பொங்கு தமிழ்' பேரணி!




(ஜெனீவா)

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா சபையின் தலைமையகத்துக்கு முன்னால் தமிழ்மக்களின் தாயக, தேசிய, தன்னாட்சி உரிமைகளை வலியுறுத்தும் பொங்குதமிழ் நிகழ்வை இன்று நடத்த ஏற்பாடாகியுள்ளது.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு பிரகடனம் செய்யும் வகையில் ஐ.நா தலைமையகத்தை நோக்கி பொங்கு தமிழ் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இன்று பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணியில் சுவிற்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின்

# புதிய பிரதமராக கதிர்காமர் இன்று பதவி ஏற்கவுள்ளார்!

## தொண்டமானும் இணையத் திட்டம்



(கொழும்பு)

13 ஆவது நாடாளுமன்றத்துக்காக நடத்தப்பட்ட தேர்தலில் 105 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் - இந்தக் கட்சியின் சார்பில் அமைக்கப்படவுள்ள அரசாங்கத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராக இன்று பதவியேற்கவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்ததும் இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தும்

### ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி புதிய அரசாங்கமொன்றை அமைத்தபின்னர் எமது அயல்நாடான இந்தியாவுடன் சகல வழிகளிலும் நல்லுறவை ஏற்படுத்தும்

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகாவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

ஈடுபட்டுள்ளது. 225 அங்கத்தவர்களை கொண்ட நாடாளுமன்றத்தில் 105 ஆசனங்கள் எமக்கு கிடைத்துள்ளன.

அண்மைய வருடங்களில் இலங்கை இந்தியாவுடன் பொருளாதாரம், மற்றும் படைத்துறை சம்பந்தமான முயற்சியில் ஈடுபட்டுள்



நாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராக இன்று பதவியேற்கவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் இறுதி முடிவுகள் நேற்று வெளியானதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 105 ஆசனங்களைப் பெற்றது. தனித்து அரசு அமைப்பதற்குத் தேவையான 113 ஆசனங்கள் இந்தக் கட்சிக்கு இல்லாதபோதிலும், புதிய பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமர் பதவி ஏற்பாரெனத் தெரியவருகிறது.

லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலை நீண்ட நேரம் கலந்துரையாடல்கள் நடத்தினார்.

முக்கியமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

அரசாங்கமொன்றை அமைத்தபின்னர் எமது அயல்நாடான இந்தியாவுடன் சகல வழிகளிலும் நல்லுறவை ஏற்படுத்தும்

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகாவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியா, இலங்கையுடன் மிக நெருங்கிய அயல்நாடு. அத்துடன் மிகச்சிறந்த நண்பன். எனவே, இந்தியாவுடன் தொடர்பை நாம் தொடர்ந்து கடைப்பிடிப்போம்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது ஆட்சியமைக்கும் தயாரிப்பில் நாடாளுமன்றத்தில் 105 ஆசனங்கள் எமக்கு கிடைத்துள்ளன.

அண்மைய வருடங்களில் இலங்கை இந்தியாவுடன் பொருளாதாரம், மற்றும் படைத்துறை சம்பந்தமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. கொழும்பு மிகப்பெரிய தொழிற்துறை கூட்டாளி என இந்தியா நினைக்கிறது.

முன்னர் ஜேர்மன் நாட்டு உல்லாசப் பயணிகளே பெருமளவில்வந்தனர். ஆனால் தற்போது இந்தியர்களே அதிகளவில் இலங்கைக்கு உல்லாசப்பயணிகளாக வருகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையின் அரசியல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் பலர் சொந்த தொகுதிகளை இழந்தனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளிகள் பலர், நடந்து முடிந்த தேர்தலில் விருப்பு வாக்குகள் மூலம் நாடாளுமன்றம் செல்லவுள்ள போதிலும், தமது சொந்த தொகுதிகளில் பெருமளவில் தோல்விகளைச் சந்தித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க, நடைபெற்று முடிந்த தேர்தலில் கோட்டைத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அர்ஜுன ரணதுங்காவிடம் 435 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இவர் பொதுஜன ஐக்கிய முன்னணியை 9144 வாக்குகளால் தோற்கடித்திருந்தார்.

இதேபோலவே, ஐக்கிய தேசிய முன்னணி அரசில் காணி அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன சொந்தத் தொகுதியான களுத்துறையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் இந்த மாவட்டத்தில் போட்டியிட்ட சுமித்திரா பிரியங்கனி அபயவீரவிடம் 11,703 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இந்த மாவட்டத்தில் 3651 வாக்குகள் வித்தியாசத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியை இவர் தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அமைச்சராக இருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையினரின் படகு மோதியதில் காயமுற்ற இந்திய மீனவர் உயிரிழப்பு

கடற்படைப் படகும், இந்திய மீனவர்களின் படகும் எதிர் எதிரே மோதிக் கொண்ட சம்பவத்தில் காயமடைந்த இந்திய மீனவர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட போது வழியில் மரணமடைந்தார்.

நெடுந்தீவு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது தமிழகத்தைச் சேர்ந்த 45 வயதான சாமிமூர்த்தி பாக்கியராஜா என்ற மீனவரே மரணமடைந்தார் என, யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் பி.ப.2.45 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீன்பிடிப் படகுடன் - அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகு ஒன்று மோதியது.

இந்தச் சம்பவத்தின்போது- மீன்பிடிப் படகில் இருந்த மூன்று இந்திய மீனவர்களும் கடலில் தூக்கி வீசப்பட்டனர். இவர்களை கடற்படையினர் மீட்டபோது மீனவர்களில் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

காயமுற்ற இந்திய மீனவருக்கு காரைநகரிலுள்ள கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும் போது (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினர் பொன்விழாவை முன்னிட்டு விசேட சமய அறிவுப் போட்டிகள், செயல் முறைப் போட்டிகள், சைவசமய அறிவுப்பரீட்சைகள் என்பனவற்றை நடத்தினர்.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வர்களின் பெயர் விபரம் கடந்த வாரம் வெளியாகியிருந்தது அதன் மிகுதி வருமாறு :

### தோரணம் பின்னல் போட்டி (மத்திய பிரிவு)

சி.சுபாங்கன் 29/11 உடையார் ஒழுங்கை யாழ்ப்பாணம்), துரைவீர சிங்கம் கோவிந்தராசா (கதிர்காம கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர் வேலி), ந.வேற்கரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) றே.அஜந்தா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

### தோரணம் பின்னல் போட்டி (மேற்பிரிவு)

வ.மதீசன் (இணுவில் இந்துக் கல்லூரி), க.கமலநாதன் (பத்திர காளி கோவிலடி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்), ம.தலீபராஜா (நயினாதீவு மகா வித்தியாலயம்)

### தரம் 1 மாணவர்களுக்கான நதிநூல் மனனப்போட்டியில் சிறப்பு பரிசு பெறுவோர்.

சி.வைஷ்ணவி (இந்து ஆரம்ப பாடசாலை) ந.சாளினி (புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ரா.லிங் காஜீசன் (புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்) அ.தர்சனா (மானிப் பாய் மகளிர் கல்லூரி) த.சுவர்ணன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) க.பிர பாகரசோழன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) அ.ஜவர்ஜன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியா லயம்), ஆ.ஜெசிதா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ந. சதுஷா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), த.ஆர்த்தி (கோப்பாய் நாவலர் தமிழ்வித்தியாலயம்), ர. கிருத்திகா (சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி), ம.சிந்துஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ப.வினூஷியா (கொக்குவில் இந்து ஆரம்பபாட சாலை), செ.சாகித்தியா (கொக் குவில் இந்து ஆரம்பபாடசாலை), தெ.ஜனனி (கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை), ஸ்ரீ.பிரதீஸ்வரன் (இணுவில் இந்துக்கல்லூரி), கு.மீரா (இணுவில் இந்துக்கல்லூரி), ப.சர ணியா (நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம்), பு.ரம்ஜா (பெரிய புலம் மகாவித்தியாலயம்), சு. லாவன்ஜா (பெரியபுலம் மகாவித்தி யாலயம்), வி.விமல்சன் (ஆனைப் பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியா லயம்), ச.ஜனனி (ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), வ.யட்சாயினி (ஆனைப்பந்தி மெத டிஸ் மிஷன் வித்தியாலயம்), கே. சண்முகாயினி (ஆனைப்பந்தி மெத டிஸ் மிஷன் வித்தியாலயம்), வெ.பா லயசோதினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), த.ஆதவன் (யாழ்.இந்து ஆரம்பபாடசாலை சி.குகதர்ஷன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஆ.சோபிகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), சி.ஜெயசக்தி (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), வி.தேவசேனா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), வி.ஜானுகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ம.திருஷிகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ஈ.பவித் திரா (யாழ்.இந்து ஆரம்பபாட சாலை), க.கஜானியா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சி.கஜன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ச.சிந்துஜா (கொழும்புத்துறை இந்து மகா வித் தியாலயம்), ச.சோபனா (கொழும் புத்துறை இந்து மகா வித்தியாலயம்), து.யாலுஜா (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), ம.மது சாலினி (அச்சுவேலி புனித தெரே சாள் மகளிர் கல்லூரி), ம.தரண்யா (தெல்லிப்பளை மகாஜனக் கல் லூரி), ம.சிந்துஜா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), க.மீரா (தெல் லிப்பளை மகாஜனக் கல்லூரி), வா.விதுஷா (தெல்லிப் பளை மகா ஜனக் கல்லூரி), மு. காயத்திரி (தலையாழி ஞானவைரவர் அற நெறிப்பாடசாலை), ச. காவியா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாட சாலை), ம. சுகன்யா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) ச. சதுஷ்ரிகா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை), ப. கேமிலா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாட சாலை), ப.கபிஸ்கா(யாழ்.இந்து மகளிர் ஆரம்ப் பாடசாலை), பு.சிலக் ஷா(யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இ.கஜனி (அச்சு வேலி மத்திய கல்லூரி), ந. அபிராமி (தெல்லிப்பளை மகாஜனாக் கல் லூரி)

### தரம் 2 மாணவர்களுக்கான நதிநூல் மனனப்போட்டியில சிறப்பு பரிசு பெறுவோர்.

ப.சரவணன் (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), க. விஸ்ணுகா(அச்சுவேலி புனித தெரே சாள் மகளிர் கல்லூரி), கு.மிதுலா (அச்சுவேலி புனித தெரேசாள் மக ளிர் கல்லூரி), சி.நவநீதா (மானிப் பாய் மகளிர் கல்லூரி), பா.சிவபானு சுந்தசர்மா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), நி.சரண்யா (கோப் பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), இ.ராவண்யா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.சாரங்கன் (சண்டிலிப் பாய் இந்துக்கல்லூரி), ய.தரணிகா (இராமநாதன் கல்லூரி), பு.மதியுகா (இராமநாதன் கல்லூரி), ஜெ.கிரு ஷாந்தி (இராமநாதன் கல்லூரி), இ. நிவேதா (இராமநாதன் கல்லூரி), ம.பிரியவதனா (இராமநாதன் கல் லூரி), ஆ.ஹரிசங்கர் (கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை), வி. தனு சியா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ம.இமாஜினி (கொக்கு வில் இந்து ஆரம்பபாடசாலை), ம. சோபிகாந் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கை.புனோசன் (கொக் குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஞா.கஜேந்தினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஜெ.ரதீபன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), செ.கவிதா (யாழ். இந்து ஆரம்பபாடசாலை), இ.கௌதமி (யாழ்.இந்து ஆரம்பபாட சாலை), கி.சண்முகேசன்(யாழ்.இந்து ஆரம்பபாடசாலை), சி.சுகன்யா (யாழ்.இந்து ஆரம்பபாடசாலை),

(தொடரும்....)

சங்கத்தானை சாவகச்சேரி

※ A/L 2006 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்.

※ II வது பிரிவுகள் 07.04.2004 புதன் ந.ப. 12.00 மணி ஆரம்பம்.

※ தமிழ் : திரு.இரா.அகிலன்

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும ஒரேதின வெளியீடாக விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல்

விஜய் மற்றும் பலர் நடித்த A.R. ரஹ்மானின் இசையில்

(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனி மாதம் 23 ஆம் திகதி (ஆங்கிலம் 05.04.2004) திங்கட்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

பிரியா இல்லம்

என்னும் புதுமனையில் பிரவேசம் செய்ய திருவருள் கூடியுள்ளது. அவ்வேளையில் நடைபெறும் மங்கள நிகழ்வில் தாங்களும் குடும்ப சமேதராய் வருகைதந்து சிறப்பித்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்"

திரு.திருமதி பஞ்சநாதன் குடும்பத்தினர்.
(வர்த்தகர் - திருநெல்வேலி)

பிரியா இல்லம்
பொற்பதி வீதி, கொக்குவில்

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத் குமார், விக்ரம், தேவயானி நடித்த

விண்ணுக்கும் மண்ணுக்கும்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

(சி-2262)

THE ITTALION JOB

ராஜா யாழ்ப்பாணம்.

வசீகரன், பூஜா நடித்த



கண்களால் கைது செய்

காட்சி நேரம்:-
10.30, 2.30,
6.30,9.30 (பு.நே)

(சி-2263)

## மக்கள் சக்தியின் மகோன்னத வெற்றி

**அன்புக்கினிய தமிழ் உறவுகளே...!**



விடுதலைக்கு உந்துசக்தியான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பனவற்றை நோக்கிய தேர்தலில் உங்கள் வாக்குப் பலத்தால் உலகுக்குச் செய்தி சொல் லிய பெருமைக்குச் சொந்தக்காரர்கள் நீங்கள். இந்த வகையில் உங்கள் மண்ணின் மைந்தனான என்னை ஆதரித்து விருப்பு வாக்கு மூலம் எனக் கான மக்கள் பிரதிநிதித்துவத்தினை வழங்கிய மக்கள் அனைவருக்கும் மற்றும் நல்லூர், மானிப் பாய், கோப்பாய், வட்டுக்கோட்டை தொகுதி வாழ் மக்களுக்கும், குறிப்பாக தென்மராட்சி வாழ் மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

"ஒற்றுமையுடன் பலத்தால் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்"

என்றும் மக்கள் சேவையில்,
நடராஜா இரவிராஜ்.

(705)

## நன்றி தெரிவித்தல்

கடந்த 02.04.2004 அன்று நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர் தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளராக நின்ற என்னை அமோக வாக்குகளால் வெற்றி பெறுவ தற்கு உழைத்த பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்த வர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்களுக் கும், சமூக நிறுவனங்களுக்கும், வெளி நாடுகளிலிருந்து ஆதரவு வழங்கியோ ருக்கும், பொதுமக்களுக்கும், என்னுடன் கூடநின்று உழைத்த உறவுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரியப் படுத்துவதில் மகிழ்வு கொள்கின்றேன்.

என்றும் உங்கள் சேவையிலுள்ள,
கி.சிவனேசன்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(706)

# தேர்தல் முடிவுற்ற நிலையிலும் 23 வன்முறைச் சம்பவங்கள்!

தேர்தல் இடம்பெற்ற தினத்திலிருந்து கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 23 வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் பொலிஸ் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதில் 21 வன்முறைகள் தேர்தல் சம்பந்தமானவை. இந்தச் சம்பவங்கள் அம்பாறை மாவட்டத்தில்தான் கூடுதலாக இடம்பெற்றுள்ளது. அடுத்து கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன.

வேட்புமனு தாக்கல்செய்யப்பட்ட தினத்திலிருந்து மொத்தமாக 1469 வன்முறைகள் இடம்பெற்றன. இதில் 1159 குற்றவியல் சட்டத்துக்கு கீழாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஏனையவை தேர்தல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களாகும்.

இந்தத் தேர்தல் வன்முறைகளில் 535 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# 8 நிமிட வீடியோ நிகழ்வுக்கு 1 கோடி 50 லட்சம் செலவு!

எட்டு நிமிட வீடியோ நிகழ்வை ஒளிப்பதிவு செய்வதற்கு ஒரு கோடி 23 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க் பயணத்தை கடந்த சில மாதங்களுக்கு முன்பு மேற்கொண்டிருந்தபோது இலங்கையில் முதலீடு செய்வது சம்பந்தமான ஒரு நிகழ்வை ஒளிப்பதிவு செய்வதற்கே, இந்தப் பெருந்தொகைப் பணம் செலவழிக்கப்பட்டுள்ளதாம்.

வெளிநாட்டு இலத்திரனியல் ஊடக நிறுவனம் ஒன்றுக்கே, இம்முதல் செலுத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவலப்பிட்டிய

# வாக்குச் சாவடி வாக்குகளை ரத்துச்செய்யத் தீர்மானம்!

நாவலப்பிட்டியில் உள்ள ஒரு வாக்குச் சாவடி வாக்குகளை இரத்துச்செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இந்த வாக்குச் சாவடியில் 1534 வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இங்கு கடமை புரிந்த அதிகாரிகளுக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதை அடுத்தே தேர்தல் ஆணையாளர் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாவலப்பிட்டியில் இன்னுமொரு இடத்தில் தேர்தல் வாக்குகள் கணிப்பிடுவது தேர்தல் ஆணையாளரால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இங்கு இடம்பெற்ற குழப்ப நிலை காரணமாக தேர்தல் ஆணையாளரால் இம்முடிவு எடுக்கப்படடுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தேர்தல் வன்முறைகள் பற்றி தாமும் அந்தந்தப் பிரதேச தெரிவத்தாட்சி அதிகாரிகளும் ஆராய்ந்துவருவதாகவும், இதற்கான முடிவு விரைவில் அறிவிக்கப்படுமென்றும், மீள் வாக்குப்பதிவு எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பின்னர்தான் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார்.



திருகோணமலை மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி 2 ஆசனங்களைப் பெற்றதையடுத்து முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன் க்.துரைரட்ணசிங்கம் இருவரையும் கௌரி முகுந்தன், சாகுல் ஹமீது ஆகியோர் திருமலை சிவன் கோவிலடிப் பகுதியில் வைத்து மாலை சூடி வரவேற்பதைக் காணலாம்.



புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவாகியுள்ள இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறை அலுவலகத்திற்கு சனிக்கிழமை தமது வெற்றியின் பின்னர் சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சீ.திலக்கை சந்தித்து உரையாடுவதைக் காணலாம்.

# தேர்தலில் முறைகேடு என்பவர்கள் தோல்வி அடைந்தவர்களே!

## புதிய வன்னி எம்.பி கனகரத்தினம்

தற்போது நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெறவில்லை என்று கூறுபவர்கள் தேர்தலில் தோல்விகண்டவர்களே.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டு நாளுமன்றத்திற்கு தெரிவான கனகரத்தினம் கண்டனம் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்ற தேர்தல் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் களம் மக்களும், விடுதலைப் புலிகளும் ஒன்றுதான் என நிரூபித்துக் காட்டி இருக்கின்றனர். நாம் மக்களின் உரிமைகளை நிச்சயம் தட்டிக் கேட்போம். இந்தத் தேர்தல் மூலம் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒன்று என்பதை சர்வதேச சமூகத்துக்கு மக்கள் உணர்த்தியுள்ளனர்.

ஜனநாயக தேர்தல் ஒன்று நடைபெறவில்லை என்று கூறுபவர்கள் தேர்தலைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள். தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து சுமார் 35 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். மக்கள் தமிழ் மண்ணை நேசிக்கின்றவர்கள். இதனால்தான் ஒருமித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் ஏகோபித்த தமது ஆதரவை பல துன்பங்களுக்கு மத்தியிலும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நீண்ட தூரம் குழந்தைகளுடன் வந்து வாக்களித்து தமது எழுச்சியை மக்கள் உலகிற்கு காட்டியுள்ளனர். விடுதலைப் புலிகளை மக்கள் நன்குணர்ந்தவர்கள். தமிழ் மக்கள் தமது உணர்வை இன்று உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரைபினை தமிழ் மக்கள் ஏற்றிருக்கிறார்கள். முடிவற்ற ஆதரவு வழங்கி வைராக்கியத்துடன் செயற்பட்டு இருக்கிறார்கள். எமது தேசியத் தலைவர் பிரபாகரன் என்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர். எனவே நாம் தேசிய நோக்குடன் செயற்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற உதவிய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுத தலைவர் தமது நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை வரலாற்றில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இம்முறை நடந்த தேர்தல் அமைதியாகவும் அதிக வன்முறைச் சம்பவங்கள் இல்லாமலும் நடைபெற்றுள்ளன.

தேர்தலை அமைதியாக நடத்த அனைவரும் சிறப்பாக தமது பங்களிப்பை வழங்கியிருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

# நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் புதிய கலாசாரத்துக்கான அங்கமே

## கிங்ஸ்லி றொட்றிகோ

புதிய கலாசாரத்துக்கான ஒரு அங்கமாக இந்தத் தேர்தலை தாங்கள் கருதுவதாக தேர்தலைக் கண்காணிக்கும் 'பவ்ரல்' அமைப்பின தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் இடம்பெற்ற 72 மணித்தியாலங்கள் இடம்பெற்றபோதும், எந்தவொரு வன்முறைகளும் இடம்பெறாததால் இந்தத் தேர்தலை புதிய கலாசாரத்துக்கான ஒரு அடிப்படை என்று கருதுவதாகவும், அடுத்துவரும் அரசாங்கம் உரியமுறையில் ஜனநாயக வழியில் வழிநடத்தக் கூடிய ஒரு அரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை - சுயாதீனமானதும், நியாயமானதுமான ஒரு தேர்தலை முதன்முறையாக ஏற்படுத்தியதற்கு தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸார் ஆகியோர் முக்கியமானவர்களாக இருந்துள்ளனர். அத்துடன் வாக்காளர்கள் தமக்குரிய வேட்பாளர்களை - சுதந்திரமாகவும், நீதியாகவும் தெரிவுசெய்துள்ளனர். இது இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரை முழுமையான சிறந்த கலாசாரத்துக்கான தேர்தல் எனவும் கிங்ஸ்லி றொட்றிக்கோ மேலும் தெரிவித்தார்.

## இரு பிரதான கட்சிகளுக்கும்

# ஆட்சியமைக்க ஆதரவு வழங்க ஜாதிக ஹெல உறுமய தயார்!

ஆட்சிப்பீடமேறும் வாய்ப்புள்ள இரு பிரதான பௌத்த சிங்களக் கட்சிகளுக்கும், ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள உத்தியோகபூர்வ அழைப்பில், ஆட்சியமைப்பதற்கு தங்களது கட்சியின் ஆதரவு தேவைப்படுமிடத்து, எந்தவொரு கட்சியுடனும் தாம் இணைந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும், அத்தகைய அழைப்பை எதிர்பார்த்திருப்பதாகவும் அறிவித்துள்ளது.

19 மில்லியனுக்கும் அதிகமான மொத்த சனத்தொகையில் 70 வீதமானவர்கள் பௌத்த மதத்தவர்களாக இருப்பதால், பௌத்த மதத்திற்கு வந்துள்ள அச்சுறுத்தலை நீக்க, தங்களது கட்சியை ஆட்சியமைக்கும் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ளுமாறு பகிரங்கமாக இக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

# தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் இன்று சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

நடந்துமுடிந்த பொதுத்தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கையை இன்று தேர்தல் ஆணையாளரிடம் - தமது குழு சமர்ப்பிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் சிரேஷ்ட கண்காணிப்பாளர் ஜோன் குஷ்னாகன் தெரிவித்தார்.

கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபட்ட ஜப்பானிய தேர்தல் கண்காணிப்புக்குழுவினரும் தமது அறிக்கையை இன்று சமர்ப்பிக்க விருப்பதாக ஜப்பானிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஹிஸ்லானி ரிச்சா தெரிவித்தார்.

இவ்விரு கண்காணிப்புக்குழுக்களும் வெவ்வேறாக வெளியிட்டுள்ள அறிக்கைகளிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுத்தேர்தல் முடிவடைந்தும் போக்குவரத்து சேவை சீரில்லை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவடைந்தபோதிலும் நாட்டில் போக்குவரத்து சீராகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் போக்குவரத்து வழமை நிலைக்குத் திரும்பாததால் பொதுமக்கள் பல கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கை போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமாக 3000 பஸ்களே பாவனையில் உள்ளன. இதில் 1800 பஸ்கள் தேர்தல் கடமைக்காகப் பயன்படுத்தப்பட்டன. இந்த பஸ்கள் இன்னமும் உரிய உரிய இடங்களுக்குத் திரும்பி வராததாலேயே இந்த போக்குவரத்து நெருக்கடிகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கரையோர ரயில் சேவை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. வாக்களிப்பதற்காகச் சென்ற ரயில்வே ஊழியர்கள் சேவைக்கு இன்னும் வராததில் ரயில்வே சேவை தொடர்ந்து பாதிக்கப்பட்டுவருவதாகவும் ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தனியார் பஸ் சேவையும் நாட்டில் அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சத்தாலும், சில பஸ்கள் தேர்தல் கடமைக்குப் பாவிக்கப்பட்டிருப்பதாலும் இந்தச்சேவையும் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# 13 ஆவது நாடாளுமன்ற தேர்தல் - 2004

## மாவட்ட மட்ட முடிவுகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ இலங்கை தமிழரசுக் கட்சி | 257 320 | 8 |
| ☆ ஈ.பி.டி.பி. | 18 612 | 1 |
| ☆ சுயேட்சை 01 | 5 156 | 0 |
| ☆ முஸ்லிம் காங்கிரஸ் | 1 995 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 291 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 266 | 0 |
| ☆ சுயேட்சை 02 | 151 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 305 259 | |
| நிராகரிக்கப்பட்டவை | 21 233 | |
| செல்லுபடியான வாக்குகள் | 284 026 | |
| மொத்த வாக்காளர் தொகை | 644 279 | |

### மட்டக்களப்பு மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ இலங்கை தமிழரசுக் கட்சி | 161 011 | 4 |
| ☆ முஸ்லிம் காங்கிரஸ் | 43 139 | 1 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 26 268 | 0 |
| ☆ ஐ.தே.க. | 6 151 | 0 |
| ☆ ஈ.பி.டி.பி. | 2 556 | 0 |
| ☆ புளொட் | 1 010 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு | 366 | 0 |
| ☆ இல.முற்.முன்னணி | 155 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 119 | 0 |
| ☆ சுயேட்சை 01 | 102 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 254 023 | |
| நிராகரிக்கப்பட்டவை | 12 648 | |
| செல்லுபடியான வாக்குகள் | 241 375 | |
| மொத்த வாக்காளர் தொகை | 303 928 | |

### வன்னி மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ இலங்கை தமிழரசுக் கட்சி | 90 835 | 5 |
| ☆ ஐ.தே.க | 33 621 | 1 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 7 259 | 0 |
| ☆ புளொட் | 6 316 | 0 |
| ☆ ஈ.பி.டி.பி. | 1 097 | 0 |
| ☆ ஐ.சோ.க. | 588 | 0 |
| ☆ சுயேட்சை 09 | 231 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 151 003 | |
| நிராகரிக்கப்பட்டவை | 10 626 | |
| செல்லுபடியான வாக்குகள் | 140 377 | |
| மொத்த வாக்காளர் தொகை | 226 604 | |

### திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ இலங்கை தமிழரசுக் கட்சி | 68 955 | 2 |
| ☆ முஸ்லிம் காங்கிரஸ் | 65 187 | 1 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 31 053 | 1 |
| ☆ ஐ.தே.க. | 15 693 | 0 |
| ☆ ஹெல உறுமய | 791 | 0 |
| ☆ ஈ.பி.டி.பி. | 540 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு | 117 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 191 657 | |
| நிராகரிக்கப்பட்டவை | 8 863 | |
| செல்லுபடியான வாக்குகள் | 182 794 | |
| மொத்த வாக்காளர் தொகை | 224 307 | |

### திகாமடுல்ல மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 111 747 | 3 |
| ☆ முஸ்லிம் காங்கிரஸ் | 76 563 | 2 |
| ☆ இலங்கை தமிழரசுக் கட்சி | 55 533 | 1 |
| ☆ ஐ.தே.க. | 42 121 | 1 |
| ☆ ஈ.பி.டி.பி. | 1 611 | 0 |
| ☆ ஹெல உறுமய | 1 130 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு. | 335 | 0 |
| ☆ இல.முற்.முன்னணி | 272 | 0 |
| ☆ சுயேட்சை 02 | 146 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 104 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 308 625 | |
| நிராகரிக்கப்பட்டவை | 18 264 | |
| செல்லுபடியான வாக்குகள் | 290 361 | |
| மொத்த வாக்காளர் தொகை | 379 044 | |

### களுத்துறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 291 208 | 6 |
| ☆ ஐ.தே.க | 212 721 | 3 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 56 615 | 1 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 560 | 0 |
| ☆ ஐ.சோ. கட்சி | 432 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு | 420 | 0 |
| ☆ சுயேட்சை 09 | 212 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 161 | 0 |
| ☆ சுயேட்சை - 08 | 140 | 0 |
| ☆ சுவராஜ்ய | 100 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 593 760 | |
| நிராகரிக்கப்பட்டவை | 30 741 | |
| செல்லுபடியான வாக்குகள் | 563 019 | |
| மொத்த வாக்காளர் தொகை | 746 138 | |

### குருநாகல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 412 157 | 9 |
| ☆ ஐ.தே.க | 340 768 | 7 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 37 459 | 0 |
| ☆ தே.அ.முன்னணி | 1 058 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு. | 550 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 349 | 0 |
| ☆ சுயேட்சை 10 | 286 | 0 |
| ☆ ஐ.சோ.க. | 265 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 191 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 834 043 | |
| நிராகரிக்கப்பட்டவை | 40 396 | |
| செல்லுபடியான வாக்குகள் | 793 647 | |
| மொத்த வாக்காளர் தொகை | 1089 482 | |

### பொலநறுவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 106 243 | 3 |
| ☆ ஐ.தே.க | 75 664 | 2 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 2 413 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 627 | 0 |
| ☆ தே.அ.முன்னணி | 116 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 197 934 | |
| நிராகரிக்கப்பட்டவை | 12 673 | |
| செல்லுபடியான வாக்குகள் | 185 261 | |
| மொத்த வாக்காளர் தொகை | 254 062 | |

### அனுராதபுர மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 212 943 | 5 |
| ☆ ஐ.தே.க | 148 612 | 3 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 8 034 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 1 439 | 0 |
| ☆ தே.அ.முன்னணி | 432 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 177 | 0 |
| ☆ சுயேட்சை 05 | 126 | 0 |
| ☆ சுயேட்சை 04 | 100 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 393 406 | |
| நிராகரிக்கப்பட்டவை | 21 281 | |
| செல்லுபடியான வாக்குகள் | 372 125 | |
| மொத்த வாக்காளர் தொகை | 514 149 | |

### அம்பாந்தோட்டை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 178 895 | 5 |
| ☆ ஐ.தே.க | 98 877 | 2 |
| ☆ தேசிய அபி. முன்னணி | 328 | 0 |
| ☆ ஐக்கிய லலித் முன்னணி | 252 | 0 |
| ☆ ஐ.சோ. கட்சி | 239 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 195 | 0 |
| ☆ சுயேட்சை 08 | 139 | 0 |
| ☆ பூமி புத்திரக் கட்சி | 105 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 297 034 | |
| நிராகரிக்கப்பட்டவை | 17 724 | |
| செல்லுபடியான வாக்குகள் | 279 310 | |
| மொத்த வாக்காளர் தொகை | 384 361 | |

### கம்பஹா மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 509 963 | 9 |
| ☆ ஐ.தே.க. | 367 572 | 6 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 102 516 | 2 |
| ☆ தே.அ.முன்னணி | 4 622 | 0 |
| ☆ ஐ.சோ. கட்சி | 2 852 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 932 | 0 |
| ☆ சுயேட்சை 10 | 260 | 0 |
| ☆ பூமி புத்திரக் கட்சி | 203 | 0 |
| ☆ சுயேட்சை 09 | 149 | 0 |
| ☆ சுயேட்சை 03 | 143 | 0 |
| ☆ சுவராஜ்ய | 129 | 0 |
| ☆ ஐ.ம.தே.முன்னணி | 107 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 1030 864 | |
| நிராகரிக்கப்பட்டவை | 40 862 | |
| செல்லுபடியான வாக்குகள் | 990 002 | |
| மொத்த வாக்காளர் தொகை | 1327 145 | |

### மாத்தளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 108 259 | 3 |
| ☆ ஐ.தே.க. | 100 642 | 2 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 8 819 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 1 135 | 0 |
| ☆ தே.அபி.முன்னணி | 271 | 0 |
| ☆ தே.ம.கட்சி | 267 | 0 |
| ☆ சுயேட்சை 06 | 263 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 109 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 239 611 | |
| நிராகரிக்கப்பட்டவை | 19 549 | |
| செல்லுபடியான வாக்குகள் | 220 062 | |
| மொத்த வாக்காளர் தொகை | 312 556 | |

### பதுளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 181 705 | 5 |
| ☆ ஐ.தே.க | 178 634 | 3 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 6 932 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 647 | 0 |
| ☆ தே.அபி.முன்னணி | 610 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 588 | 0 |
| ☆ சுயேட்சை 07 | 329 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 248 | 0 |
| ☆ சுயேட்சை 06 | 141 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 400 337 | |
| நிராகரிக்கப்பட்டவை | 30 159 | |
| செல்லுபடியான வாக்குகள் | 370 178 | |
| மொத்த வாக்காளர் தொகை | 511 115 | |

### இரத்தினபுரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 261 450 | 6 |
| ☆ ஐ.தே.க | 205 490 | 4 |
| ☆ ஹெல உறுமய | 20 801 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 1 336 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 738 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 649 | 0 |
| ☆ தே.அபி.முன்னணி | 585 | 0 |
| ☆ சுயேட்சை 07 | 307 | 0 |
| ☆ சுயேட்சை 06 | 199 | 0 |
| ☆ சுயேட்சை 05 | 112 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 520 349 | |
| நிராகரிக்கப்பட்டவை | 28 346 | |
| செல்லுபடியான வாக்குகள் | 492 003 | |
| மொத்த வாக்காளர் தொகை | 647 035 | |

### நுவரெலியா மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.தே.க. | 176 971 | 4 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 82 945 | 2 |
| ☆ மலையக மக்கள் முன்னணி | 49 728 | 1 |
| ☆ ஜன.ஒற்.முன்னணி | 10 736 | 0 |
| ☆ ஹெல உறுமய | 4 454 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 1 426 | 0 |
| ☆ தே.அபி.முன்னணி | 532 | 0 |
| ☆ லிபரல் கட்சி | 188 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 187 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 352 022 | |
| நிராகரிக்கப்பட்டவை | 24 413 | |
| செல்லுபடியான வாக்குகள் | 327 609 | |
| மொத்த வாக்காளர் தொகை | 436 236 | |

### கண்டி மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.தே.க. | 313 859 | 6 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 268 131 | 5 |
| ☆ ஜாதிக ஹெல உறுமய | 42 192 | 1 |
| ☆ தே.அபி.முன்னணி | 1 109 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு. | 548 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 501 | 0 |
| ☆ ஐ.சோ.கட்சி | 324 | 0 |
| ☆ சுயேட்சை 09 | 233 | 0 |
| ☆ சுயேட்சை 07 | 178 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 147 | 0 |
| ☆ சுயேட்சை 08 | 129 | 0 |
| ☆ சுவராஜ்ய | 103 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 673 350 | |
| நிராகரிக்கப்பட்டவை | 45 484 | |
| செல்லுபடியான வாக்குகள் | 627 866 | |
| மொத்த வாக்காளர் தொகை | 880 634 | |

### கொழும்பு மாவட்டம்

| | | |
|---|---|---|
| ☆ ஐ.தே.க. | 441 841 | 9 |
| ☆ ஐ.ம.சு.முன்னணி | 414 688 | 8 |
| ☆ ஹெல உறுமய | 190 618 | 3 |
| ☆ தே.அபி.முன்னணி | 2 420 | 0 |
| ☆ புதிய இடதுசாரி முன்னணி | 2 037 | 0 |
| ☆ தே.ம.கட்சி | 1 273 | 0 |
| ☆ ஐ.சோ.க. | 894 | 0 |
| ☆ ஐ.மு.ம.மு. | 858 | 0 |
| ☆ சுயேட்சை 07 | 683 | 0 |
| ☆ ஐ.ல.முன்னணி | 550 | 0 |
| ☆ ஈ.பி.டி.பி. | 539 | 0 |
| ☆ சுவராஜ்ய | 404 | 0 |
| ☆ பூமி புத்திரக் கட்சி | 203 | 0 |
| ☆ சோ.ச.கட்சி | 159 | 0 |
| ☆ சுயேட்சை 11 | 114 | 0 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 1096 571 | |
| நிராகரிக்கப்பட்டவை | 38 605 | |
| செல்லுபடியான வாக்குகள் | 1057 966 | |
| மொத்த வாக்காளர் தொகை | 1467 751 | |

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சதுரங்கப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கச் சுற்றுப்போட்டி - எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான போட்டிகள் 7 ஆம், 8 ஆம் திகதிகளிலும்,

ஆண்களுக்கான போட்டிகள் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும் காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்கான சுற்றுநிருபங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுபபி வைக்கப்பட்டுள்ளது.

### மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

நீர்வேலி மடத்தடிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற அச்சுவேலி- பத்தமேனியைச் சேர்ந்த கருணாகரன் என்பவர் காயமடைந்து, அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### அத்தியடி பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் வரை நடைபெறவுள்ளன.

13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# நாம் முன்வைத்த திட்டங்களுக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



திருகோணமலை மாவட்டத் தில் இடம்பெற்ற பொதுத் தேர் தலைப் பொறுத்தவரை, நாம் முன் வைத்த திட்டங்களுக்குத் தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ள தாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்த நிலையில் மக்களின் நலன்பேணும் அனைத்துப் பணிகளிலும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பாடுகளை மேற்கொள்வோம் எனத் தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலையில் போட்டியிட்டு, வெற்றி பெற்றவரான இரா.சம்பந்தன் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, இதற்கான அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும். இதன் மூலமே வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

இத்தகைய நடவடிக்கைமூலம் யுத்தநிறுத்தம் மேலும் பலப்படும்நிலை உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நிதி நெருக்கடியால்

# வடமராட்சி மீனவ குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் இடைநிறுத்தம்

(வடமராட்சி)

வடமராட்சி கரையோரப் பகுதியில் இன்பருட்டி கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வந்த - குடிநீர் விநியோகம் இடைநிறுத்தப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இதனால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திக்கம் சந்திமுதல் சுப்பர் மடம் வரையான கரையோரப்பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த, நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்கு இன்பருட்டி கடற்தொழில் சங்கத்தினால் குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

இதற்காக முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் இரண்டு பவுசர்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதன்மூலம் இந்தப் பகுதிகளில் உள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது.

தற்போது குடிநீர் விநியோகிப்பதற்காகச் செலவாகும் நிதியைச் சங்கத்தினால் ஈடுசெய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கான நிதியை அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரப்பட்டு வருவதாகச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண இளைஞர்கள் இருவர் சென்னை விமானநிலையத்தில் கைது

போலி ஆவணங்களுடன் சென்னை விமானநிலையத்தில் நடமாடிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்குச் சென்னை விமானநிலையத்துக்கு வந்த - யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த சிவராஜா சிவராமன் (வயது 24), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மா.குலசீலன் (வயது 30) ஆகிய இருவருமே கைதானவர்கள் ஆவர்.

இவர்களை மத்திய தொழில் பாதுகாப்புப்படையினர் சோதனையிட்ட போது, கைதான இருவரிடமும் ஏர்இந்திய விமானத்தில் மும்பை வழியாக அமெரிக்கா செல்ல ரிக்கெட் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

## யாழ்.மாவட்டத்தில்

# தேர்தல் நீதியாக நடைபெற்றது தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் தேர்தல்கள் நீதியாகவும், நேர்மையாகவும் நடந்துள்ளன என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகத் தேர்தல் கண்காணிக்கும் குழு ஒன்று குற்றச்சாட்டியதை அடுத்து, குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றும், தேர்தலில் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் தான் கருதுவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.



பனையியல் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட பேராசிரியர் சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

# தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தோருக்கு ஸ்ரீகாந்தா நன்றி தெரிவிப்பு !



வட்டுக்கோட்டை, ஊர்காவற்துறை தொகுதி - தேசியத்தை மதித்து, இந்தமுறை வாக்களித்தமையையிட்டு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சிசார்பாகப் போட்டியிட்டு, விருப்பு வாக்கடிப்படையில் ஆசனத்தினை இழந்த அவர் நமது ஈழநாட்டிற்கு கருத்துத் தெரிவித்த போது இதனைத் தெரிவிததார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

வட்டுக்கோட்டை, ஊர்காவற்துறைத் தொகுதி மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்துத் தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்த்தமையை இட்டு மனம் மகிழ்கின்றேன்.

விருப்பு வாக்கடிப்படையில் ஐயாயிரம் வாக்குகளால் நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படாது போயினும், நான் எனது கட்சி வெற்றி பெற்றமையை இட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்படி விருப்பு வாக்குகள் முக்கியமானவை.

எனினும், எனக்கு 35 ஆயிரம் வரையில் விருப்பு வாக்களித்த மக்களுக்கு என்றும் நன்றிக் கடமைப் பட்டுள்ளேன். என்றும் யாழ். மக்களுடன் இணைந்திருப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் - மாணவி ஒருவருக்கு காரை நகர் உதவி அரசாங்க அதிபர் சாம்பசிவம் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (91)

# வடமராட்சி வடக்கு சமாசத்திற்கு 6 மில்லியன் செலவில் மூன்று கூலர்

## ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும்

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு - ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஆறு மில்லியன் ரூபா செலவில் மூன்று கூலர்களை வழங்கியுள்ளது. இதன்மூலம் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைச் சந்தைப் படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் என வடமராட்சி வடக்கு கடறதொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

இதன்மூலம் வலிகாமம் மற்றும் வடமராட்சி பகுதிகளிலுள்ள மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை கொளவனவு செய்து சந்தைப்படுத்தலாம்.

மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக வடமராட்சி பகுதியில் இரு மீன்கொள்வனவு நிலையங்களும், வலிகாமத்தில் ஒரு மீன்கொள்வனவு நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான கட்டடங்களை அமைப்பதற்குப் பட்டினிக்கு எதிரான சர்வதேச நிறுவனம் நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதனை அடுத்து, வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - கட்டடம் அமைப்பதற்கான காணிகளை கொளவனவு செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் நிலவரம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குக

## யாழ்.தேர்தல் செயலகம் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் தொடர்பான நிலைமைகள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் - யாழ்.மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் கோரியுள்ளார்.

பொதுத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக அரசியல் கட்சி ஒன்றும், சுயேட்சைக் குழு ஒன்றும் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளன. இந்த முறைப்பாடுகள் குறித்த விபரங்களை சேகரிப்பதற்காகவே தேர்தல் ஆணையாளர் யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோரியுள்ளதாக தெரியவருகின்றது. யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் கள்ளவாக்கு போடுதல், ஆள்மாறாட்டம் என்பன இடம்பெற்றுள்ளதா என்ற விபரங்களே கோரப்பட்டுள்தாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.



அனுராதபுரம் நீராவியடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வளவில் விவேகானந்த பாலர் பாடாசாலையை ரூவான்வெலிசாய விகாராதிபதி திறந்துவைத்த பின்னர், அவருடன் வருகை தந்த மிரிசவெட்டிய விகாராதிபதி மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.








சிறுகதை

# சலனம்

ரஜிதா

டாண்! டாண்! நல்லூர்க் கந்தனின் கோயில் மணியோசை காதை நிறைந்தது. அது ஓங்காரத் தத்துவமே நான்தான் எனக் கூறுவதுபோல் ஓங்கி ஒலித்தது.

பக்தர் கூட்டத்தினால் கோயில் நிறைந்திருந்தது. இன்று ஐப்பசிக் கடைசி வெள்ளி. எனவே, கோயிலில் திருவிழா போல சனக்கூட்டம் அலைமோதியது.

ஐப்பசி பிறந்ததுக்கு, கோயிலுக்குச் செல்லவில்லை. இண்டைக்குக் கடைசி வெள்ளி. இண்டைக்காவது போவம் வாங்கோப்பா என்ற மனைவியின் நச்சரிப்பிற்காக வந்தாலும், பல நாட்கள் காணாத கந்தனைக் காண்பதில் எனக்கும் ஆர்வம்தான்.

ஆனாலும், என்ன செய்வது கோயிலுக்கு வந்ததிலிருந்து என்னையும் கட்டுப்படுத்தத்தான் முயல்கின்றேன், மனமென்ற குதிரை எனது கடிவாளத்திற்குக் கட்டுப்பட்டால்தானே. ஒருவாறு கண்களை மூடி, கந்தனின் வேலினை மனதிற்குள் பதித்தேன்.

அருகே ஓர் மல்லிகை வாசனை மூக்கை நிமிண்டியது. பலவாறான கற்பனைகளுடன் கண்களை விரித்தேன். எனது கற்பனைக்கு முற்றிலிலும் மாறுபட்ட கோணத்தில் ஒருத்தி நின்றாள்.

கையில்லாத உடற்பரிமாணங்களை எடுத்துக்காட்டும் ரீசேட், தைத்துவிட்டுப் போட்டாளோ, போட்டுவிட்டுத் தைத்தாளா? என்ற ஐயத்தை எழுப்பக்கூடிய கனகச்சிதமான ஜீன்ஸ், தலைவிரி கோலம். அதிகஷிக் ஷம்பூவின் வாசனை, ரீசேட்டிலிருந்து கிளம்பிய மல்லிகை சென்ரின் வாசனை, தடித்த கறுத்த உதட்டிற்குச் சிறிதும் ஒவ்வாத உதட்டுச்சாயம், மொத்தத்தில ஓர் அருவருப்பு உணர்வு மேலோங்க, எனது கற்பனையை மீட்டிப் பார்த்தேன். சிரிப்புத்தான் வந்தது. தொடர்ந்து அந்த இடத்தில் நிற்கப்பிடிக்காது அப்பால் நகர்ந்தேன்.

கற்பூரம் எரிக்கும் இடத்திற்கு அருகில் நின்றேன். கற்பூர வாசனை உடலிற்கும் மனத்திற்கும் இன்பமளித்தது. அதன் மிதமான வெப்பம் மழையால் குளிர்ந்துபோன உடலுக்கு இதமளித்தது. அவ்விடத்தைவிட்டு நகரமுடியாது, அங்கேயே நின்றேன். இரண்டாம் மணி அடித்தது. உள்ளே சென்ற மனைவி பூசை முடிந்தபின்பே வெளியே வருவாள். அது வரை... எனது எண்ணச் சங்கிலியை அறுப்பதைப்போல சுடிதார் அணிந்த பெண்ணொருத்தி என்முன்னே குனிந்து கற்பூரத்தைப் போட்டாள்.

அவளைப் பார்க்கும்போது- எனக்கும் மனைவிக்குமிடையே நடந்த வாதாட்டத்தை மீட்டிப்பார்த்தேன். அது சுடிதாருக்கும் சேலைக்கும் நடந்த வழக்கு. அவள் சேலைக்கட்சி, நான் சுடிதார்க்கட்சி. இப்படியொரு சண்டைக்கு மூலகாரணமே நான்தான்.

அன்று தை முப்பதாந்தேதி. அவளது பிறந்த தினம். அவளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பதற்காக ஒரு சுடிதார் வாங்கிவந்து கொடுத்தேன்

'ஒரு சாறி வாங்கி வந்தாலும் பரவாயில்லை. உதை எங்கே போடுறது. எனக்கும் வேண்டாம்'. என மறுத்துவிட்டாள்.

ஏன் இண்டைக்குக் கோயிலுக்குப் போவம். போட்டுக் கொண்டு வா என்றேன்.

கோயிலுக்கோ, என வாயைப் பிளந்தாள். அங்கதான் கொஞ்சமொண்டாலும் எங்கட பண்பாட்டோட சனம் வருகுது. அதைக் கெடுக்காதேங்கோ. கட்டமுன்னம் எண்டாலும் பரவாயில்ல என்று சண்டைக்கோழிபோல சிடுசிடுத்தாள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. அத்தோடு, எனது பரிசை மறுத்த அவமானமும் சேர்ந்துகொண்டது.

பெரிய சாறி. ஒவ்வொரு பொம்பிளையளும் சாறி கட்டுற இலட்சணம் எங்களுக்குத் தெரியாதே. முதுகில பாதியைக் காட்டுற மாதிரி ஒரு ஜன்னல். கை இருக்கோ இல்லையோ என்று நினைக்க வைக்கிற சிம்ரன்ர கை, தொப்புள் தெரியிற மாதிரி ஒரு சாறிக்கட்டு, உப்பிடிக் கட்டிப்போட்டு புனிதமான தாய்-சேய் உறவைச் சித்திரிக்கின்ற, தொப்புளில பம்பரம் உருட்டுறாங்கள், முட்டை பொரிக்கிறாங்கள் எண்டு சினிமாவைக் குறை சொல்லுறது. பொடியளில என்ன பிழை. சுடிதார எண்டா எல்லாம் மூடலாம். இந்த இடத்தில இஸ்லாமிய பண்பாடுதான் சிறந்ததெண்டு நான் அடிச்சுச் சொல்லுவன். ஒரு பெரிய பட்டிமன்றமே நிகழ்த்தினேன். என்ன பிரயோசனம். முடிவில் அவள் கட்சிதான் ஜெயித்தது. தோல்வியை எனதாக்கிக் கொடுத்து, கோயிலுக்குக் கூட்டிச்சென்று திருப்திப்படுத்த வேண்டியதாயிற்று.

ஆனால், இன்று எனது வாதாட்டத்தை எல்லாம் பொய்யாக்கும் வகையில் என்முன் நின்று சுவாமியைத் தரிசிக்கும் சுடிதார் அமைந்திருந்தது. அது சுடிதாருக்கும் ஜீன்சுக்கும் இடைப்பட்ட ஒரு கலப்பு உடை. கட்டையான மேலாடை. அதில் இடுப்புவரை ஓடிய வெட்டு, இறுக்கமான பிஜாமா, கற்பூரத்தை போட்டதோடு அந்தப் பெண் நின்றிருக்கலாம். விழுந்து கும்பிடுகிறாள்.

என்னையும் சேர்த்தல்லவா விழுத்துகிறாள். இவளுக்கு எதற்கு பஞ்சாங்க நமஸ்காரம்.

மூன்றாம் மணி அடித்தது. பூஜை ஆரம்பமானது. இனியும் இங்க நிற்கக் கூடாது. குளிக்கப்போய் சேறு பூசுறது எண்டு இதைத்தான் சொல்லுறது. கோயிலுக்கு வந்து பாவத்தைச் சம்பாதிக்கிற மாதிரி. உள்ளே போய்க் கும்பிடுவம். எண்ணத்தைச் செயலாக்கினேன்.

நான் வாசலில் நுழையவும் பூசகர் அடுக்குத் தீபத்தை உயர்த்தினார். அந்த இன்பஜோதியில் நானும் கலந்துகொண்டேன். பூஜைகள் முடிந்து சுவாமிசுற்ற ஆரம்பித்தது. அவர்கள் கந்தனைத் தோள்களில் சுமக்க, நானோ நெஞ்சினில் சுமந்தபடி நடந்தேன். என்னை மறந்த நடையில் கால்கள் இடறி விழப்பார்த்தேன். முன்னால் நின்ற பெண்ணின் தோள்களில் கைகளை ஊன்றி அந்நிலையிலிருந்து விடுபட்டேன்.

என் மனமோ உதறல் எடுத்தது. இவ்வளவு சனத்துக்குள்ள என்னென்ன பேசுவாளோ. இந்தக் கண்றாவியை ஆரார் கேட்கப்போகினமோ. கந்தா காப்பாற்று மனதார வேண்டினேன்.

என்ன அதிசயம்! அந்தப் பெண் திரும்பிப் பார்க்கவுமில்லை, எதுவும் பேசவும் இல்லை. அப்போதுதான் அந்தப் பெண்ணில் பின்புறத்தை தலையிலிருந்து கால் வரை பார்த்தேன். சாறி கட்டும் இலக் கணத்திற்கேற்ப விரசம் தோன்றாதவாறு காஞ்சிபுரம் சாறி கட்டியிருந்தாள். முழுகியதால் காயாத தனது மயிரை லூசாக்கி, அடியில் ஒரு முடிச்சுப் போட்டிருந்தாள். தலையில் மல்லிகைச்சரம். அவளின் இலட்சுமிகரமான முகத்தைப் பார்க்கவேண்டும் போலிருந்தது.

கஷ்டப்பட்டு அந்த ஆவலை அடக்கிக்கொண்டேன். நான் தொட்டதிற்குப் பேசாமல்விட்டதே புண்ணியம் என எண்ணிக் கொண்டேன். இருந்தும் அவளை விட்டு அப்பால் போகமுடியவில்லை. சுவாமி உள்வீதி சுற்றி முடியும்வரை அவள் பின்னே நிழல்போல்த் தொடர்ந்தேன். இந்தச் சனத்தினால் எத்தனையோ தடைகள். இடையே வருபவர்களை விலத்திச்சென்றேன். கேவலமான மனிதர்கள் - ஒருவனின் உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளாத ஜடங்கள் என மனதால் திட்டிக்கொண்டேன். ஏதோ நானும் அவளும்தான் சாமியைச் சுத்துவது போன்ற நினைப்பு என்னுள்.

சுவாமி இருப்பிடத்துக்கு வந்துவிட்டது. பெண்கள் வரிசையில் அவள். அவளருகில் நான். முயற்சியைக் கைவிடவில்லை. எப்படியாவது அவள் முகத்தை ஒரு தடவை பார்த்து விடவேண்டும் என்ற ஆவல்.

பூசகர் விபூதி கொடுத்தார். நான் கைகளை நீட்டி வாங்கினேன். மீண்டும் அவள் தோளில் எனது கை உரசிவிட்டது. நான் பயந்துபோனேன். 'பேசாமல் ஓடிவிடலாமா?' என எண்ணினேன். இவ்வளவு நேரமும் அவள் முகத்தைக் காணும் ஆவலில் இப்போது அவள் எப்படி முறைப்பாளோ முருகா! என்ன செய்யலாம். கடவுளுடைய இருப்பிடத்தில் அடிக்கிற கூத்துப் போதாதென்று முருகனையே உதவிக்குக் கூப்பிடுறதே எனக்கு நல்ல தண்டனைதான் கிடைக்கப்போகுது. சிந்தனைகள் ஓடப் பயந்து நின்றேன்.

ஆனால், அவளோ மென்மையாக என்நெஞ்சில் சாய்ந்தாள். என் உடல் பூராவும் இன்பக்கிளர்ச்சி. எனது முகம்வரை தனது உடலை உயர்த்தி "என்ன இடத்தில எப்பிடி இருக்கிற தெண்டு தெரியாதே" என்று கிசு கிசுப்பாய்க் கூறினாள்.

அந்தக் குரல்! மிகவும் பரிச்சயமான குரல். யாருடைய குரல்? நாளும் பொழுதும் நான் கேட்டகுரல். இந்தக் குரலுக்குரியவள்... ஆண்டவா? எனது மனைவி. இவளுடைய அழகில் சொக்கியா பித்தனைப்போல் திரிந்தேன்?

முருகா! நல்லபாடம் கற்பித்தாய். என்போன்ற சலனக்காரர்களுக்கு இதுதான் நல்ல அடி. நீ தந்தைக்கே குருவானவன் அல்லவா? அதுதான் எனக்குப் பாடம் புகட்டியிருக்கிறாய். முருகா! பரீட்சைக்குப் பின்னர் பாடம் புகட்டும் உனது திருவிளையாடல்தான் என்னே!

மனம் நெக்குருக அந்த பாலசண்முகனின் திருவடிகளைத் தொழுதேன்.

"ம்... பூஜை நேரம் உரசுப்படுறது. இப்பத்தான் கும்பிடுறது" மனைவி இடித்தாள். பஸ்ஸினுள் ஏறி அமர்ந்தோம். என்மனதில் ஏதோ ஓர் நிறைவு, மகிழ்ச்சி. எதுவுமே பேசமுடியவில்லை.

என் மனைவியை உற்றுநோக்கினேன். நான் அவள் பின்னாலேயே சுற்றிய பெருமிதமும் மகிழ்ச்சியும் அவள் கண்களில் தெரிந்தது. ஆதரவாய் உரிமையோடு அவள் தோள்களில் கைபோட்டேன். குலுக்கலுடன் பஸ் புறப்பட்டது.

(யாவும் கற்பனை)

# குமரா இதுவும் குலப்பெருமை தானா??

உள்ளத்து உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கும் ஒப்பந்த சிற்பி அவன். வானவில்லின் வண்ணங்களை வார்த்தைகளிற்கு தீற்றும் ஓவியனும் அவன். சந்தங்கள் யாவும் இங்கிதமாய் வந்தாடும் அவன் நாவில், அவன்தான் நாயக்கர் காலத்தின் தனிச்சிறந்த புலவன் காளமேகம்.

கையிலே ஒரு பை, காழகத்திலே கசங்கிய ஒருதுணி அற் றத்தைக் காப்பதற்கு, ஒரு கையில் தன் நிர்வாணத்தை மறைத்துக்கொண்டு மறுகையால் ஆடை நெய்து அணிய வேண்டிய அவஸ்தை. தன் தலைக்கு மேலே நித்தமும் வட்டமிடும் வறுமைப் பருந்துகளிற்கு நான் இன்னும் செத்து விடவில்லை என நிரூபிக்கவேண்டிய நிர்ப்பந்தப் பொருளாதார நிலை. ஆனாலும், அத்தனைக்கும் மேலாக ஆசுகவி அவன் உதடுகளால் உருளும் கவித்துவம்.

மாலைநேரம் சாலையோரம் மாமேதை காளமேகம் கற்களிலும் முட்களிலும் நடக்கிறான். காலத்தினால் கருத்தரிக்கப்பட்ட கவிக்குழந்தை அவன் - குற்றும் கற்களையும், குமுறும் கவிதைகளால் வடித்தெடுப்பான். முற்களைக்கண்டு முறுவலிக்கும் அவன் கவியாற்றலால், கடவுளைக் கல்லாக்குவான். காளமேகத்தின் கவித்துவத்தின் முன்னால் கடவுளும் கல்லும் ஒன்றுதான். காளமேகத்தை படைத்த பரமனையே பார்த்து - பரிதாபப்படுகிறான் காளமேகம். வந்திக்கும் தெய்வங்களையே நிந்திக்கின்றான் இக்கவிஞன்.

பட்டினியையும் வரட்சியையும் பரத்தமை ஒழுக்கத்தையும் பாடியவன் - பரமசிவன் மைந்தன் முருகனையும் விட்டு விடவில்லை.

'உமையவளை உடன் கொண்ட சங்கரன் மகனே திருக்குமார! ஆதி சிவன் பெற்றெடுத்த அருமைமகனே ஆறுமுகா - உன்குலப்பெருமை எனக்கென்ன தெரியாத ஒன்றா?' கேட்கின்றது ஆசுகவியின் வீசு கவித்துவம்.

'சங்கரன் மகன்தான் நீ, சுந்தரன் என உனக்குள்ளே ஒரு எண்ணம். உண்பதற்கே பாத்திரமின்றி மண்டையோட்டை ஏந்தி மண்டியிட்டு யாசித்தவன் உன்தந்தை. உன் தாயோ மக்கட் பண்பற்ற வேடர்குல வேந்தன் மகள் நீலி. நீலி என்றால் பேயென்றும் பொருள். அப்போ...? ஆயர் சேரியிலே ஆள் அரவமற்ற வேளையிலே உறிமீதேறி வெண்ணெய் திருடியவன் உன் ஒப்பற்ற மாமன். ஐயோ பாவம், பரமசிவன் மைந்தா! பானை வயிற்றுடன் இருக்கின்றானே உனக்கொரு அண்ணன். இவ்வளவும் உன் குலப்பெருமையன்றோ,' என்று பரமசிவன் மைந்தனையே பாடிவிட்டுச் செல்கின்றான் ஆசுகவி.

**அப்பனி ரந்துண்ணியாத்தாள் மலைநீலி**
**ஒப்பரிய மாமனுறி திருடி சப்பைக்கால்**
**அண்ணன் பெருவயிறராறு முகத்தானுக்கு**
**கென்னும் பெருமையிவை.**

லெஸ்லி

# உங்கள் நூலகத்திற்கு... புதிய வரவுகள்...



சஞ்சிகையின் பெயர்:- புதிய தரிசனம் (பங்குனி 2004
ஆசிரியர்:- த.அஜந்தகுமார்
இதழ் - 03/=
உள்ளடக்கம்:-
கலை இலக்கிய சமூகம், அறிவியல் சஞ்சிகை
விலை :- 20/=



சஞ்சிகையின் பெயர்:- அருள்ஒளி (மாசி 2004)
ஆசிரியர்:-
செஞ்சொற்செல்வர் திரு ஆறுதிருமருகன்
மலர் - 19
வெளியீடு:-
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
உள்ளடக்கம்:- இரைதேடுவதுபோல் இறையையும் தேடுவோம்.



நூலின் பெயர்:- கூத்தரங்கம் (பங்குனி 2004)
அளிக்கை - 01
உள்ளடக்கம் :-
பெண்கள் அரங்கும், நாடகக்கலையும் உள்ளடக்கப்பட்டது.
விலை :- 10



நூலின் பெயர்:- சரம்
ஆசிரியர்:- திருமதி ரிச்சேட் அடைக்கல நாயகி (ஜனவரி 2004)
உள்ளடக்கம் :- மதம் நாட்டுப்பற்று, விடுதலை, அமைதி என்ற பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய கவிதைநூல்.

# தோழமை

கிழிசல் துணியை தைக்கும் வேலையில் விரல்கள்
சுட்டு விரல் அடுத்த விரலைப்பார்த்து 'துன்பப்படுகிறவர்களுக்குத் துன்பப்படுகிறவர்களே துணை' என்றது.
அடுத்த விரல் கேட்டது.
'ஏன் அப்படிச் சொல்கிறாய்?'
'இதோ பாரேன்...' சுட்டுவிரல் சொன்னது
'கிழிசல் துணிக்கு
ஓட்டை ஊசி.'

# தளிர்ப்பு

இலையுதிர் காலம்.
மரம் மொட்டையாக நின்றது.
புல்மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின.
'உன்இலைகள் விழுந்து கொண்டிருக்கின்றன. உன்னைப் பார்த்தால் அழவேண்டும் போல இருக்கின்றது...' என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது.
மரம் சொன்னது –
'நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்.'
நிமிர்ந்து நின்றது மரம்.
அது சொன்னது –
'விழுவதற்கெல்லாம்
அழுவதற்கில்லை'

**கவிஞர் காசிஆனந்தன்**

# வெளிப்பாடு

பாரதி அவர்கள் பாடிய பாடல்களை மனப்பாடம் பண்ணும்படியாக ஆசிரியர் சொன்னார். 10 வயதுச் சிறுவன் ஒருவன் பாரதியின் பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டிருந்தான்.

பாரதி தேசப்பற்று மிக்க கவிஞராக தமிழ் உலகத்தில் பேசப்பட்டு வருகின்றார். அவரின் பாடல்கள் தேசத்தின் விடுதலையை நோக்கியவையாக அமைந்தவை. பெண்விடுதலை, சமூக விடுதலை முதலான பல்வேறு விடுதலைகள் தொடர்பாக பாரதி தனது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். பாரதி பற்றிய சொற்பொழிவு ஒன்றில், மேடையில் 20 வயது இளைஞன் ஒருவன் பேசிக கொண்டிருக்கின்றான். பாரதியின் பெண் விடுதலை பற்றிய பாடல்களும், சமூகவிடுதலை பற்றிய பாடல்களும் அவரை புரட்சிக் கவிஞன் எனப் பேசவைத்துள்ளன. அவனுடைய பாடல்களிலே எளிமை காணப்படுவதோடு, புதுமையும் காணப்படுகின்றது. அதனால், அவன் புரட்சிக் கவிஞன் எனப் போற்றப்பட்டான்.

இவ்வாறு பாரதி பற்றி 30 வயதான ஒருவன் குறிப்பிட்டுக்கொண்டிருந்தான்.

பாரதியார் புதுக்கவிதை வடிவங்களை உலகிற்கு தந்துள்ளார். தமிழில் புதுக்கவிதை மரபு தோற்றம் பெறுவதற்கு வழி அமைத்துக்கொடுத்த ஒருவராகப் பாரதியார் விளங்குகின்றார். மரபுக் கவிதை புழக்கத்தில் இருந்த காலத்தில் புதுக்கவிதை அல்லது வசனக்கவிதை என்ற மரபை தமிழில் அறிமுகப்படுத்திய பெருமை பாரதியாரையே சாரும். தமிழிலக்கிய விமர்சகர் ஒருவரின் பாரதி பற்றிய பார்வை இவ்வாறானதாக அமைந்திருந்தது.

பாரதியார் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் வாழ்ந்த ஒரு கவிஞரும் புரட்சிவாதியும் ஆவார். இவரைப் பற்றி எழுதுகின்ற, பேசுகின்றவர்கள் அவருடைய காலத்திற்குபிறகு தான் வாழ்ந்திருக்கவேண்டும். அவ்வாறுதான் வாழ்கின்றார்கள், வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஒருவர், பாரதியாரை அவர் என்றும், இன்னொருவர் அவன் என்றும் கூறுகின்ற வழக்கத்தை காண்கின்றோம். இந்த நிலைக்குரிய காரணம் என்ன என்பது பற்றிய ஒரு சிந்தனையே மேற்குறித்த வயது வேறுபாடுகளும், பாரதி பற்றிய வேறுபாடான சிந்தனைகளும் ஆகும்.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் வருகின்றபோது, அந்தந்த வயது வேறுபாட்டின் அடிப்படையில் மனிதன் கருத்துக்களைக் கூறுகின்றான் என்பது புலனாகின்றது.

அதேவேளை பாரதி மட்டுமல்ல, மதிப்புக்குரிய பெரியோர்களும், கவிஞர்களும் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தமிழர் என்கின்ற மன வெளிப்பாடு இதுவென்று கூறினாலும் பொருந்தும்.

**நகுலன்**

# ஒரேமாதிரித்தான்!

ஒரு நாள் மதியம் 12 மணியிருக்கும். இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன் ஹையஸ் வான் ஒன்று வேகமாக பின்னே வந்து கொண்டிருந்தது. இடம்கொடுத்து வீதியின் அருகில் சென்று கொண்டிருந்தபோது, இடது புறமுள்ள ஒரு ஒழுங்கையினுள் இருந்து வயதுபோன ஒருவர் சைக்கிளில் வந்து, பிரதான வீதியில் நான் போகின்ற பக்கம் திரும்பும்போது...

அதேநேரம் நானும் அவரின் பக்கம் வந்தேன். திடீரென என்னைப் பார்த்ததும் அந்தப் பெரியவர் சைக்கிள் ஓடுவதில் நிதானம் இழந்து, மதிலோடு மோதியதும் உடனே என்னைப் பார்த்துக் கேட்டார்- "அறிவு இருக்கா" என்று. எனக்கு வந்த ஆத்திரத்தில் நான் திருப்பிக்கேட்டேன் "ஏன் வேணுமா" என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவரைத் திரும்பிப்பார்க்காமல் சிரித்துக்கொண்டு சென்றுவிட்டேன்.

அன்று மாலை 6 மணிக்குப் பெருமாள்கோயிலுக்குச் சென்றேன். அங்கே சுற்றிக்கும்பிட்டுவிட்டு வந்து கோயிலுக்கு முன் பக்கம் நின்றுகொண்டிருந்தேன். பூசை முடிந்ததும் பஞ்சாமிர்தம் கொடுத்தார்கள். அதை வாங்கி சாப்பிட்டுவிட்டு ஒரு பேப்பரினை எடுத்து கையினைத் துடைத்துவிட்டு திரும்பியபோது, எனக்குப் பின்னே நின்ற ஒருவர் பஞ்சாமிர்தம் வாங்கிச் சாப்பிட்டதுமல்லாது கையை நக்கிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் சென்று அண்ணை என்றதும் - உடனே என்னை நிமிர்ந்து பார்த்தார். கூடுதலாக நக்காதேங்கோ. கையிலுள்ள ரேகை அழிந்துவிடும் என்றேன். அவரும் ஒரு பார்வை பார்க்க நானும் சிரித்துவிட்டு வந்துவிட்டேன்.

இன்னொரு நாள் - எனது உறவினர் இறந்துவிட, கோம்பயன் மயானத்தில் அடக்கம் செய்வதற்காக அங்கே சென்று காவலாளியிடம் கேட்டபோது - முதலே வந்து பதிவுசெய்யவேண்டும். நிறைய முன்பதிவுகள் இருக்கின்றது என்றார். நான் உடனே அந்தக் காவலாளியைப் பார்த்துக்கேட்டேன் - சாகமுதலோ என்று. உடனே படலையை சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார்.

சிரித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியபோது- வழியில் வந்த ஒருவர் கேட்டார் கல்லுண்டாப் பாலம் எங்கே இருக்கிறது என்று? நான் சொன்னேன்- கல்லுண்டாயிலுள்ள தண்ணீருக்கு மேலே என்று. விசரா உன்னையும் கேட்டேன் என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவரைப் பார்த்துக்கொண்டு சைக்கிளில் ஓடினேன். ஒரு கல்லில் ஏற்றிக்கல்லுக்குத்திக் காற்றுப் போனது. சைக்கிள் கடையில் ஒட்டிவிட்டு, வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தேன். வழியில் வந்த ஒருவரிடம் நேரம் என்ன என்று கேட்க- நேற்றையநேரம் என்று சொல்லிவிட்டுச் சென்றான். அதில் ஒருதிருப்பம் எனக்கு ஏற்பட்டது. உறவினர் வீட்டுக்குச் சென்றேன். அங்கே பிணத்தினை எடுத்துவிட்டார்கள். மயானத்திற்கும் சென்றேன் அங்கே எரிந்துகொண்டிருந்தது எனது கேலிப்பேச்சுகளும்.

**-செல்வா**

# என்குடிய என்னோடு!!

அறிமுகமில்லாத நண்பர்களோடு
என்னைப் பார்த்தபடியே
கதைப்பாய்,
எனக்குள்ளே என்னை
மட்டும்
அறிமுகப்படுத்திக் கொண்ட
என்னோடு மட்டும்
பலரையும் பார்த்தபடியே
கதைப்பாய்!

மழைநாட்களில்
வீட்டில் இருந்துகூட
வீதியை எட்டிப்பார்க்காத
உனக்கு
நான் நனைந்துவந்து
போவது மட்டும்
உனக்கு எப்படித்தெரியும்!

சுகமா என
எழுதும் கடிதங்களில்
எல்லாம்
உன்னைக் கேட்பாய்
என்னிடம்
பதில்கடிதம் போடும்
போதும்
நான் கேட்பது உன்னிடம்
நான் சுகமா!

எனது வீட்டில்
ஒரு அறை
உனக்காக ஒதுங்கியது
நான் இருந்த நாட்களில்
கவிதையானது அறை,
எல்லோரையும்
அனுமதித்திருக்கின்றேன்
உன்னைத்தவிர,
ஏனெனில்
நீ இல்லாதபோது
அழகாயிருக்கும்!

நீ பார்க்கின்றபோதும்
என்னுடன் கதைக்கின்றபோதும்
உன் புன்னகையிலும்
உன் அழுகையிலும்
இரவுத் தூக்கத்திலும்
காலை எழுந்தவுடனும்
அழகாய் இருக்கின்றாய்
நீ

உடுத்தியிருக்கும் துணிகள்
மறைக்கும் உனது வீட்டு
அறைகள்
கதவு யன்னல் சேலைகள்
போய்வருகின்ற பாதையில்
அழகில்லாமல் இருந்தாலும்!

மனப்பூக்களில் பறித்த
காயங்கள்
சில நேரங்களில் மட்டும்
வலிக்கின்றது
ஏனோ தெரியவில்லை
பனித்துளிகூட வந்து அமர
இடமில்லை
மறுக்கின்றது
அம்மா முகம் பார்த்ததும்
சொல் என்பாய்
என் முடிவு என்னாகும்
உன்னிடம்
நல்ல செய்தி சொல்ல!

Puttalam I

**செல்வம்**

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் — பகுதி XLI — சிவா சின்னப்பொடி

# தாய் மொழியில் கல்வி கற்கின்ற மாணவர்கள் பின்தங்கிவிடவில்லை



நம்மவர்களிடம் இருக்கும் இந்த அடிமை மனோபாவம்தான் - புலம்பெயர்ந்த சக்தியின் அடையாளச் சிதைவுக்கு அடிப்படையாக அமைகின்றது.

இன்று பிரான்சிலோ, ஜேர்மனியிலோ, நெதர்லாந்திலோ, இத்தாலியிலோ, டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளிலோ வாழும் தமிழ்க் குழந்தைகள் இன்றும் தமிழை நன்றாகப் பேசுகின்றனர். பெரும்பாலும் எழுதவும், படிக்கவும் பழகிக்கொள்கின்றனர்.

ஆனால், இங்கிலாந்துக்கு அதாவது ஐக்கிய இராட்சியத்துக்கு பெற்றோரால் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கேயே பிறந்த குழந்தைகளில் 98 வீதமானவை தமிழை மறந்து 'ரமில்ஸ்' ஆகிவிட்டன. **I Don't speak tamil** என்று சொல்வதையிட்டு அவர்கள் வெட்கப்படவில்லை.

எப்போது ஒரு இனம் தனது மொழியை இழக்க ஆரம்பிக்கின்றதோ, அப்போதே அது தனது அடையாளத்தையும் இழக்க ஆரம்பித்துவிடுகின்றது.

புலம்பெயர்ந்து, அந்நிய மாற்று மொழி, மாற்றுப் பண்பாட்டுக் கலாசாரச் சூழலில் உரியமுறையில் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்திட்டத்தின்மூலம் வழிநடத்தப்படும் எந்தவொரு இனமும், தன்னுடைய அடையாளத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதற்கு யூத இனம் முழு உதாரணமாகத் திகழ்கின்றது.

தற்போது தமிழர் இல்லாத நாடும் இல்லை - தமிழர்களுக்கு என்றொரு நாடும் இல்லை என்று சொல்வதைப்போல, ஒரு காலத்தில் யூதர்கள் இல்லாத நாடும் இல்லை, யூதர்களுக்கு என்றொரு நாடும் இல்லை என்று சொல்லப்பட்டது.

தமிழர்களைப்போல ஒரு காலத்தில் உலகெங்கும் அகதிகளாக அரசியல் அந்தஸ்து இல்லாதவர்களாகச் சென்ற யூதர்கள் - தாயகத்துக்கான பயணம் என்ற வேலைத் திட்டத்தின்கீழ் தங்களை ஒழுங்கிணைத்துக் கொண்டார்கள்.

ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து (ஐக்கியராட்சியம்) இத்தாலி, சுவீஸ், ஸ்பெயின், அமெரிக்கா, கனடா என்று உலகின் பல பகுதிகளிலும் - பல நாடுகளிலும் அவர்கள் வாழ்ந்தபோதிலும், எந்த அந்நிய மொழிக்கும் அடிமையாகி விடவில்லை. ஆங்கிலமோ, பிரெஞ்சோ, டொச்சோ தான் உலகத்துக்கான திறவுகோல் மொழிகள் என்று அவர்கள் நினைக்கவில்லை. உலகில் எந்த நாட்டில் வாழ்ந்தார்களோ - அந்த நாட்டு மொழியை அவர்கள் கற்றார்கள். அந்த மொழிகளில் அதியுயர் பட்டப்படிப்புக்கூட படித்தார்கள். ஆனால், அவர்கள் தங்கள் தாய்மொழியான ஹிப்று மொழியைக் கைவிடவில்லை, குறைத்து மதிப்படவில்லை. தாங்கள் கற்ற அந்நிய மொழிகளிலிருந்த நல்ல விடயங்களையெல்லாம் அவர்கள் தங்கள் மொழிக்கு கொண்டுவந்தார்கள். உயர் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவையெல்லாம் புகுத்தி தங்கள் மொழியை வளப்படுத்தினார்கள்.

புறச்சூழலில் அவர்கள் அந்நிய மொழிகளைப் பேசினாலும், தங்களுக்குள்ளும் தங்கள் வேலைத்தளங்களிலும், தங்கள் வீடுகளிலும் தங்கள் தாய்மொழியையே அவர்கள் பேசினார்கள்.

அவர்கள் எந்த நாட்டில், எந்த நகரத்தில் வாழ்ந்தாலும் ஒருவருக்கு இரவு வணக்கமோ, பிரியாவிடையோ சொல்லும்போது 'நாளை நமது தாயத்தில் சந்திப்போம்' என்று கூறுவதை ஒரு மரபாக கையாண்டார்கள். இந்த 'நாளை' என்பது மிகநீண்டதாக இருந்தபோதிலும், அவர்கள் நம்பிக்கை தளராது தொடர்ந்து சொன்னார்கள்.

பாரிசில் நின்று 'நாளைக்கு தாயகத்தில் சந்திப்போம்' என்று சொன்னவர், மறுநாளும் பாரிசிலேயே சந்தித்தபோது மறுபடியும் தாயகத்திலே சந்திப்போம் என்று சொன்னார்

குழந்தைகள் விடையத்திலும் - அவர்களது கல்வி முறையிலும் யூதர்கள் காட்டிய அணுகுமுறை வித்தியாசமாகவே இருந்தது.

யூதர்கள் தாங்கள் வாழ்ந்த நாட்டின் புறச்சூழலோடு ஒரு காலமும் முரண்படவில்லை. தங்கள் குழந்தைகளையும் முரண்பட வைக்கவில்லை. தாங்கள் வாழ்ந்த நாட்டின் புறச்சூழலைத் தங்களது கலாசார - பண்பாட்டு - விழுமியங்களை பாதிக்காதவாறு எப்படி வெற்றிகொள்வது என்பதில் அவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள். பிரான்ஸ் போன்ற நாடுகளில் - பிரெஞ்சு மொழிக் கல்வித் திட்டத்திற்கூடாகவே புலம்பெயர்ந்து வந்த மாற்றினக் குழந்தைகள் - தங்கள் தாய்மொழியை ஒரு பாடமாக எடுக்கலாம். (அரோபியா, யூத, சீன, தமிழ் குழந்தைகள்) என்றிருந்த சட்ட அனுகூலங்களை பயன்படுத்தி - யூதர்கள் தங்களுக்கென்று தனியான முன்பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவினார்கள்.

இந்தக் கல்விக்கூடங்களிலே ஹிப்று மொழி ஒரு பாடமாகப் படிப்பிக்கப்பட்டபோது - யூதர்களது கலாசாரமும், பண்பாடும் சேர்த்தே கற்பிக்கப்பட்டது. அதேபால் முன்பள்ளிக் காலத்தில் இருந்தே குழந்தைகளுக்கு யூத அடையாளம் பற்றிய உணர்வு இந்த கல்விக்கூடங்களுக்கு ஊடாக கொடுக்கப்பட்டது. இந்த ஆரம்ப பாடசாலைகள், கல்லூரிகளில் கல்வி கற்காத (யூத) குழந்தைகளுக்குகூட வாராந்த, மாதாந்த ஒன்றுகூடல்கள்மூலம் யூத இன மத உணர்வுகள் ஊட்டப்பட்டன.

தொழில்துறைகளிலே - ஒரு யூதர் மற்றயூதருக்குப் போட்டியாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் கூட்டுச்சேர்ந்து மற்றவர்களுக்குப் போட்டியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்பட்டார்கள். தொழில்ரீதியாக ஒரு யூதன் வீழ்ந்துபோய்விட்டால், மற்ற யூதர்கள் கடன் கொடுத்து தொழில்ரீதியான ஆலோசனைகள் வழங்கி அவனை தூக்கிவிட ஏற்பாடு செய்தார்கள். இதற்கென்று ஒவ்வொரு நாடுகளிலும் நிறுவனமயப்பட்ட யூத அமைப்புகள் இயங்கிவந்தன. பொதுவாக யூதர்கள் தாங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளில் எல்லாம் மூன்று முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்தினார்கள்.

1. கல்வி
2. பொருளாதாரம்
3. ஊடகத்துறை

எந்தளவுக்கு மாற்றுமொழிகளில் கல்வி கற்றுத் தேர்ச்சி பெறமுடியுமோ அதை செய்தார்கள்.

அதுபோல சிறந்த பொருளாதார நிபுணத்துவ அறிவைப் பெற்றதன்மூலம், திட்டமிட்டபடி முதலீடுகளை செய்தும், யூதப் பொருளாதாரம் என்ற ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கியும் உலகப் பொருளாதாரத்திலும், தாங்கள் புலம்பெயர்ந்த நாட்டுப் பொருளாதாரத்திலும் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார்கள். உலகில் தங்கள் இனத்தனித்துவத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கும் தங்களுடைய அரசியல், பொருளாதார நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் ஊடகத்துறையின் அவசியத்தை உணர்ந்த அவர்கள், இன்று உலக ஊடகத்துறையூடாகக் கருதியலை, செய்திப்பரப்பலை கட்டுப்படுத்தும் ஆளுமை செய்யும் சக்தியாக வளர்ந்துவிட்டார்கள்.

யூதர்களின் கடந்த **1/2** நூற்றாண்டுகால பாச்சல் முறையிலான வளர்ச்சிக்கு ஜேர்மன் சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர் அவர்களுக்கு இழைந்த கொடுமைகள் ஒரு காரணம் என்றாலும், அவர்களிடமிருந்து ஒற்றுமை, சமூக அக்கறை, எதிர்காலம் பற்றிய பார்வை, நாட்டுப்பற்று இவைதான் முக்கிய காரணங்கள். உலகிலுள்ள தமிழர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது குறைவாயுள்ள இந்த யூத இனம் - இன்று இஸ்ரேல் என்ற ஒரு நாட்டை தங்களுக்காக உருவாக்கிக்கொண்ட பின்னரும், அந்த நாட்டின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரேல் என்ற நாடு இன்றைக்குப் படுபிற்போக்குத்தனமான கொள்கைகளை கொண்டதாகவும், பலஸ்தீன மக்களின் தாயகத்தைப் பறித்து, அவர்களை ஒழிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், புலம்பெயர்ந்த தமிழர்களால் யூதர்களின் இந்த தீய அடக்குமுறைப் பக்கத்தை விட்டுவிட்டு, தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள அவர்கள் மேற்கொண்ட செயற்திட்டங்களை முன்மாதிரியாகக் கொள்ளலாம். ஆனால், பூனைக்கு யார் மணிகட்டுவது? 'யூதன் என்ன யூதன். அவனைவிட எங்கடை பரம்பரை எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? நாங்கள் ஏன் அவனை கொப்பியடிக்க வேண்டும்? வேணும் என்றால் எங்கடை கலாசாரத்தைச் அவங்களுக்கு சொல்லிக் கொடுப்போம்' என்று திமிர்த்தனமாகப் பதில் சொல்லும் அதிமேதைகளையும்... 'டேட்டி ரமில்ஸ் எல்லாம் யூரோப்புக்கு வந்ததுக்குப் பிறகுதான் எங்கடை ஸ்ரேட்டஸ் எல்லாம் கெட்டுப்போச்சு' என்று திமிருடன் சலித்துக்கொள்ளும் மேதை ரமில்ஸ்சுகளையும்.

'ஊடகத்துறையில் இப்ப கண்ட கடை எல்லாம் வைத்து ...லப் பதிச்சாப்போலை அதுக்குரிய மரியாதை போட்டுது. தகுதி எண்டது படிப்பாலையோ அனுபவத்தாலயோ வராது. பிறப்பாலதான் வரவேணும்' என்று மார்தட்டிச் சொல்கின்ற சாதிமான்களையும் எப்படி திருத்துவது, எப்படி இவர்களை எல்லாம் வைத்துக்கொண்டு புலம்பெயர்ந்த தமிழரின் அடுத்த தலைமுறை ஆரோக்கியமாக நாட்டுப்பற்றுடன் வளரும் என்று எப்படி உறுதியுடன் சொல்லமுடியும். இது ஒரு பெரியசிக்கல்.

*(தொடரும்)*

செய்திக்கட்டுரை — ந.கஜமுகன்

# கொலை கொள்ளை வன்செயல்களின் மையமாகிவரும் தென்மராட்சி பகுதி

2000 ஆம் ஆண்டு யுத்தத்தினால் சின்னாபின்னமாகி சிதைந்த தென்மராட்சி மக்களின் வாழ்வு - 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தின்பின் ஏற்பட்ட சமாதானச் சூழலில் தமது வாழ்விடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கொலைகள், கொள்ளைகள் அதிகரித்துவருவது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் கல்வயல் ஐயனார் வீதியில் இளைஞர் ஒருவரை ஹயேஸ் வாகனம் ஒன்றில் கடத்திவந்து, ஆள் நடமாட்டமே இல்லாத அந்த வீதியில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு வாகனம் தப்பிச்சென்றுவிட்டது.

இதனால், தென்மராட்சி மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். அந்த அதிர்ச்சியில் இருந்து மீளமுன்னர் - அடுத்து கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இதில் பச்சிளம் குழந்தையும் உயிரிழந்தது.

அடுத்தடுத்து நடைபெற்ற இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பான சந்தேக நபர்கள் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை.

இந்தக் கொலைகள் நன்கு திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வயல் பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாத ஐயனார் கோயில் வீதியை தெரிவுசெய்யக் காரணம் என்ன? அந்தப் பகுதியினை நன்கு தெரிந்த ஒருவரே இந்தக் கொலையை மேற்கொண்டிருக்கமுடியும்.

கல்வயலைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை இந்தக் கொலையை மேற்கொண்டதாகக் கூறப்படினும், இன்றுவரை அந்த இளைஞர் கைதுசெய்யப்படவில்லை.

இதேவேளை, கனகம்புளியடிச் சந்தியில் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரையும் கொலை செய்தவர் யார் என இன்றுவரை எவராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

சாதாரண மணிக்கடை வியாபாரியான இந்தக் குடும்பஸ்தர் வீட்டிற்கு அருகிலேயே பாரிய படைமுகாம் அமைந்துள்ளது. ஆனால், படையினரோ கொலை நடந்ததே தமக்குத் தெரியாதென ஒரே சொல்லில் பதிலளித்துத் தப்பிவிட்டனர்.

எனினும், மக்கள் - படையினரே இந்த ஈவிரக்கமற்ற செயலைச் செய்திருக்கலாம் என எண்ணுகின்றனர். ஒன்றுமே அறியாத பச்சிளம் பாலகனை வெட்டிக்கொலை செய்தது படையினராகவே இருக்கலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

படைமுகாமிற்கு அருகில் நள்ளிரவில் வர யாருமே துணியமாட்டார்கள். நள்ளிரவிலேயே இந்தக் கொலை நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த வாரம் படையினரின் முகாமிற்கு அண்மையில் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சாவகச்சேரி - டச்சுவீதியில் நகைக்கடை ஊழியரிடமிருந்து படையினரின் சீருடையில் வாயை கறுப்புத் துணியால் கட்டியபடி, பீல்பைக் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் ஒருகோடி ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

காலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது, வீதியால் வந்த பாடசாலை மாணவன் படையினரின் சீருடையுடன் கொள்ளையடித்துச் செல்வதைக் கண்டு, இராணுவம் கொள்ளையடித்துச் செல்வதாகக் கூக்குரலிடவே- சிறுவனை நோச்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டது படையினரே என தென்மராட்சி மக்கள் தெரிவிக்கின்றனர். தினமும் நன்கு அவதானித்துவிட்டு படையினர் பீல்பைக்கில் வந்து கொள்ளையடித்து சென்றதாகவே பலரும் எண்ணுகின்றனர்.

சாவகச்சேரி நகரிற்கு மிகவும் அருகில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த வேளை சாவகச்சேரி நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் படையினரும் நித்திரை செய்தார்களா?

துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்டு மக்கள் அந்த இடத்திற்குத் திரண்டுவந்து, காயமடைந்தவர்களை சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று, பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிய பின்புதான் சம்பவம் நடைபெற்ற இடத்தில் பெருமளவான படையினரும் பொலிஸாரும் குவிந்து நின்றனர்.

மக்கள் அவர்களிடம் உங்கள் படையினர்தான் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறியபோது - பொலிஸாரும் படையினரும் முற்றாக மறுத்துவிட்டனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் கொள்ளையர்களுடன் படையினரும் இணைந்து கொள்ளை சம்பவங்களில் ஈடுபடுவதாகக் கருதப்படுகின்றது.

உள்ளூர் வீதிகளிலும், வீடுகளிலும் - நகை, பணம் என்பன தினமும் கொள்ளை போவது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இதனால், நகைகளை அணியவே மக்கள் அச்சமுற்றுள்ளனர்.

சமாதான சூழலில் நிம்மதியாக வாழலாம் என எண்ணிய தென்மராட்சி மக்கள், தொடர் வன்செயல்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி உள்ளனர்.

தொடர்ந்து வன்செயல்கள் அதிகரிப்பதற்கு - ஒரு நீதியான நிர்வாகக் கட்டமைப்பின்மையே காரணம்!

உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படாமையாலும், உரிய தண்டனை வழங்கப்படாமையாலுமே குற்றவாளிகள் தப்பிக்க வழிவகுக்கின்றது.

நீதியான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுவதில்லை. கொலை, கொள்ளை சம்பவங்கள் நடைபெற்றால், சம்பவ இடத்திற்குச் சென்று, வீதியால் போவோர் வருவோரை மிரட்டி, தமது வாகனத்தில் ஏற்றி பொலிஸ்நிலையம் கொண்டுசென்று விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

எதுவுமே அறியாத அப்பாவிகள் தடுத்து வைக்கப்படடு விடுதலை செய்யப்படுவர். அத்தோடு, அந்த சம்பவம் முடிந்துவிடும்.

தீவிர விசாரணைகள் எவையும் பொலிஸார் மேற்கொள்வதில்லை என்பதே மக்களின் அபிப்பிராயமும், ஆதங்கமுமாகும்.

1995 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை தமிழீழ காவல்துறையினர் இங்கு கடமையில் இருந்தமையால் வன்செயல் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் இருந்தது.

அவர்களால் நீதியான தீர்வுகள் வழங்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். திறமையான நிர்வாகக் கட்டமைப்பாக அவர்கள் செயற்பட்டனர்.

ஆனால் 1995 ஆண்டிலிருந்து இன்றுவரை எண்ணற்ற வன்செயல்கள் இடம் பெற்றுள்ளன.

தென்மராட்சியில் வன்செயல்கள் இனி நடைபெறாமல் பார்ப்பது பொலிஸாரின் கடமை! தென்மராட்சி மக்கள் எதிர்பார்ப்பும் ...

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.

திருக்குறள்

## நமது நோக்கு

### தேர்தல் முடிவு தரும் கவலையும், மகிழ்ச்சியும்

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் சிக்கலானதும், குழப்பமானதுமான ஒன்றாக இருக்கப்போவதறகான சாத்தியக்கூறுகள் மிக அதிகளவில் தென்படுகின்றன.

பதின்மூன்றை அதிஷ்டமற்ற இலக்கம் என்று எண்ணும் நம்பிக்கை உலகின் பல்வேறு நாட்டு மக்களுக்கும் உண்டு. ஆங்கிலத்தில் இதனை "Unlucky Thirteen" என்பார்கள். இந்த நம்பிக்கையில் உண்மையுள்ளதோ என்னவோ, இந்தப் பதின் மூன்றாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் முடிவுகள் இந்த நம்பிக்கை குறித்த விடயத்தை நினைவூட்டவே செய்கிறது.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமக்குள்ள கடமைப்பொறுப்பினை பெருமளவுக்கு உணர்ந்து தம் வாக்குரிமையை மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும், சரியாகவும் பயன்படுத்தியுள்ளதன் மூலம் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர்... அதாவது இருபத்தேழு வருடங்களுக்குப் பின்னர், தென்பகுதிப் பேரினவாதத் தலைமைகளுக்கும், சர்வதேச சமாதான சமூகத்திற்கும், ஏனைய வல்லாதிக்க மேலாதிக்க சக்திகளுக்கும் ஒரு அழுத்தமான கருத்தை ஜனநாயக ரீதியில் இறுக்கமாகவே வலியுறுத்தியுள்ளார்கள் என்பது நிறைவையும், மகிழ்ச்சியையும் தரும் விடயமாகும்.

அதாவது, விடுதலைப் புலிகளின் தலைமைதகுத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு தமிழ்த் தேசியப் போராட்ட அணியில் ஒன்றிணைந்து உழைப்பவர்களாக இனங்காட்டி தமிழரசுக்கட்சியின் 'வீடு' சின்னத்தின் கீழ் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியதன் மூலம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மீதான தமது முழுமையான நம்பிக்கையையும், தமிழீழத் தேசியத் தலைமை மீதான தமது விசுவாசத்தையும் பிரகடனம் செய்துள்ளனர் என்றால் மிகையில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிட்ட சகல சக்திகளையும் தமிழ் மக்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்தத் தேர்தலில் நிராகரித்ததன் மூலம் இந்தத் தேர்தலில் அவர்கள் முன்வைத்த சகல கொள்கைகளையும், பிரசாரங்களையும் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளமையானது அரசியலில் சுயநலவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் மட்டுமல்ல இனவிரோத சக்திகளையும் கூட மிக நன்றாக இனங்கண்டு கொண்டுள்ளமையை உறுதிசெய்துமுள்ளது.

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் வரண்ட அரசியல் கொள்கைகளும், பிரசாரங்களும் எடுபடாது என்பதையும் இந்தத் தேர்தல் அறிவுறுத்துவதாகவும் உள்ளது. அவர்கள் தமது வாழ்வுரிமை - அரசியல் உரிமை ஆகியவற்றிற்காக இனமானத்துடன் போராடுபவர்களையே - அவர்களின் பின்னால் அணி திரண்டு விசுவாசமாக நிற்பவர்களையே தமது வழிகாட்டிகளாகவும், பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்க உறுதிபூண்டு விட்டார்கள் என்பதையும் - போரெனினும், சமாதானமெனினும் ஒரே உறுதியும், வலிமையும் செயல்வீரமும் மிக்க - தலைமையின் பின்னால் அணிவகுத்து நிற்கவே அவர்கள் தீர்மானித்து விட்டார்கள் என்பதையும் இந்த தேர்தல் முடிவுகள் துல்லியமாக தெட்டத்தெளிவாக்கியுள்ளது.

இதேவேளை, தென்னிலங்கை மக்கள் சமாதானம் குறித்த ரணில் தலைமையிலான முன்னைய அரசின் நகர்வுகளை விரும்பாது இனவாத சக்திகளின் பேச்சுக்களை நம்பி அவர்களுக்கான ஆதரவை இந்தமுறைத் தேர்தலில் அதிகரித்துள்ளார்கள்.

மிகவும் அடிப்படை வாதிகளான ஜாதிக ஹெல உறுமயக்கட்சியினர் முதற்தடவையாக பொதுத்தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு பெருமளவு சிங்கள மக்களின் ஆதரவை பெற்று சுமார் ஒன்பது இருக்கைகளை நாடாளுமன்றத்தில் பெறும் நிலை உருவாகியுள்ளமையானது இனவாத - மதவாத சக்திகளின் குரல் நாடாளுமன்றத்தில் வலுவாக ஒலிக்கப்போகிறதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலைமையானது சமாதானம் தொடர்பான தென்பகுதி மக்களின் உறுதிப்பாடு தொடர்பாக பல சந்தேகங்களை எழுப்பவே செய்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் புதிய நாடாளுமன்றத்தை பொறுப்பேற்கப் போகும் அரசு எதுவெனத் தெரிந்துவிடும்.

இந்தநிலையில் மீண்டும் ஸ்திரமற்ற அரசொன்றே உருவாகும் சாத்தியக்கூறே தென்படுவதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமே. எதுவானாலும் இந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தமது ஒரே கொள்கைமீதான நிலைப்பாட்டையும், ஒரே தலைமை மீதான விசுவாசமான உறுதிப்பாட்டையும் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இதுவே நம்பிக்கை தரும் விடயமாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி :- தமிழ் மக்கள் தமது தேசிய தனித்துவத்தின் உறுதிப்பாட்டையும், ஏகதலைமைத் துவத்தையும் இந்தத் தேர்தல் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்; தேர்தல் மூலம் மக்கள் அங்கீகாரம்

### புதிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை தமிழ்மக்கள் - தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன்மூலம் அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்கிலுள்ள மக்கள் தமது ஒட்டுமொத்தமான ஒற்றுமையையும், பலத்தையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழ் மக்களின் கோரிக்கையைக்கொண்டு முன்வைக்கப்பட்ட இடைக்கால வரைபு உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படவேண்டும். அதற்கான ஆணையை எழுத்துவடிவில் சர்வதேச சமூகத்திற்கும், இலங்கை அரசிற்கும் தேர்தல் மூலம சட்டபூர்வமானமுறையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், சர்வதேச சமூகம் விரைவாக எமது மக்களுக்கு சமாதானம் கிடைக்கக்கூடிய வகையில் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தற்போது தடைப்பட்டுள்ள சமாதானம் வெற்றி பெறவேண்டும். முக்கியமாக எமதுமக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளனர். மக்கள் சுதந்திரமான முறையிலும், நீதியான முறையிலும், சமாதானத்தினை விரும்பி ஒருமித்து வாக்களித்துள்ளனர். இதற்குமாறாக எவரும் கட்டாயத்தின் பெயரிலோ, நிர்ப்பந்தத்தின் பெயரிலோ வாக்களிக்கவில்லை. கள்ள வாக்களிப்பு நடைபெற்றது என்ற கருத்து முற்றிலும் தவறானது. இதனை கட்சிகளுக்கு அளித்த வாக்கு வீதம் எடுத்துக்காட்டியுள்ளது.

ஆட்சிக்கு வரும் அரசாங்கம் தேர்தலுக்கு முன்பு செயற்பட்டது போன்று, தேர்தலுக்குப் பின்பும் செயற்படாது, சமாதான பேச்சை ஆரம்பித்து, யாப்பில் மாற்றததினை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தன்னாட்சி அதிகாரத்தினை விடுதலைப் புலிகளுக்கு வழங்கமுன்வர வேணடும். அதற்கான ஆதரவையும், ஒத்துழைப்பையும் சர்வதேச சமூகம் முழுமையாக வழங்கவேண்டும்.

எமது மக்கள் நீண்டகாலமாகப் போராட்ட சூழலில் வாழ்ந்து வருபவரகள். ஐரோப்பிய நாடுகளிலுள்ள எமது உறவுகளும் இதனை உணர்ந்தவர்கள். குறிப்பாக எமது உரிமைகள் கிடைக்க ஐரோப்பிய நாடுகளிலுள்ள எமது மக்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (03)

# முகமாலையூடான போக்குவரத்து இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளது

முகமாலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்குச்சாவடிகளால் தடைப்பட்டுப்போயிருந்த யாழ்.குடாநாட்டிற்கான வெளியிட போக்குவரத்துக்கள் சுமுகநிலையை அடைந்துள்ளன.

அத்துடன், குடாநாட்டினுள் பொருட்களை எடுத்துவரும் சேவையும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, முகமாலையிலுள்ள இராணுவ பொதிகள் சோதனைச் சாவடிப் பகுதியில் கொத்தணி வாக்குநிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன.

இவ்வாக்கு நிலையங்களை அமைப்பதற்கு ஏதுவாகக் கடந்த புதன்கிழமை நண்பகலுடன் குடாநாட்டினுள் பொதிகளுடன் பாரவூர்திகள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று பயணிகள் போக்குவரத்திற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும், வாக்களிப்பு பணிகள் முடிவுற்று, தற்காலிக வாக்களிப்பு நிலையங்களும் அகற்றப்பட்டதையடுத்தே போக்குவரத்து நடவடிக்கைகள் தற்போது சுமுகமடைந்துள்ளது.(202)

# தேர்தல் அமைதியாக நடைபெற்றதால் ஊடரங்குச் சட்டம் அமுலாக்கப்படவில்லை

### பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

நாட்டில் அமைதியாக தேர்தல் நடைபெற்றதால், ஊரடங்குச் சட்டத்தினை அமுல்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இவ்வாறு பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற்றபோது, நாட்டில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. கிழக்கில் சில இடங்களிலே சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்றன. இவை வன்முறைகளையோ, குழப்பங்களையோ ஏற்படுத்தவில்லை. அத்துடன் பாதுகாப்பு இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து வன்முறைகள், குற்றங்கள் ஏற்படாதவகையில் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டில் பரவலாக பாதுகாப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள தொடர்ந்தும் வெளியாகிக்கொண்டிருக்கும் நிலையில், குடாநாட்டில் பரவலாக பாதுகாப்பு நடவடிக்கைகளை யாழ்படைத்தலைமை அதிகரித்துள்ளது.

குறிப்பாகக் கரையோரப் பகுதிகள் மற்றும் முக்கிய சந்திப் பகுதிகளில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றியைப் பெற்றுள்ளநிலையில், ஆதரவாளர்கள் எதிர்த்தரப்புக்களுடன் முரண்படாது அமைதியாக இருப்பது, தொடர்ந்தும் அமைதி நிலையைப்பேணத் தங்களுக்குப் பேருதவியாக இருப்பதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய உயரதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

எனினும், முக்கிய சந்திகள் மற்றும் வீதிகளில் பரவலாகப் படையினருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளிலும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(202)

அறிவியல் கட்டுரை

# தொழில்நுட்ப வளர்ச்சியில் இன்னுமொரு மைக்கல் "றீபிளே - ரி.வி"

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்குமிடையில் கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் போட்டியானது இந்தியாவில் அரசியல் சார்ந்ததாகவும், பாகிஸ்தானில் ராஜதந்திரம் சார்ந்ததாகவும் முக்கியம்பெற்ற தொன்றாகக் காணப்படுகின்றது.

இந்தவேளையில், எல்லோரினதும் இதயம் கவர்ந்த இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருக்கிறார். சச்சினுடைய ஒவ்வொரு அசைவையும் மிக உன்னிப்பாக ரசித்துக்கொண்டிருக்கும் உங்களின் வீட்டுக் கதவை யாரோ தட்டுகிறார்கள்.

என்ன செய்வீர்கள் கதவைத்திறந்துவிடவேண்டும். அவ்வாறு சென்று கதவைத் திறந்துவிட்டு வருவதற்குள் சச்சின் எல்லைக் கோட்டைத்தாண்டும்படி பந்தை அடித்து ஆறு ஓட்டங்களைப் பெற்றுவிட்டார்.

இப்பொழுது உங்கள் மனது என்ன செய்யும் தெரியுமா? அவ்வாட்டத்தைப் பார்க்க தவறிவிட்டதால் TV ஐ உடைப்பதா? கதவைத் தட்டியவரிடம் சினப்பதா? பக்கத்தில் இருப்பவர்மீது உதைப்பதா? அம்மாவை ஏசுவதா? என்ற மனநிலைதான் தோன்றும்.

கவலைப்படாதீர்கள். இனி இப்படிப்பட்ட விபரீத எண்ணங்களுக்கு இடமேஇல்லை. என்ன காரணம் என்று சிந்திக்கிறீர்களா? அதுதான் **Replay TV** என்கின்ற இப்புதிய **VCR (Video Cassette Recorder)** தொழில்நுட்பம். தன்னிச்சையாகவே நாம் பார்க்கும் நிகழ்ச்சிகளை பதிவு செய்தபடி இருக்கும்.

பதிவு நாடா (**Tape**) உள்ளே போடப்பட்டிருக்கின்றதா? பதிவு செய்வதற்கு சரியான இடத்தில் பதிவு நாடா விடப்பட்டிருக்கின்றதா என்றெல்லாம் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

அல்லது ஏற்கனவே, பதிவுசெய்யப்பட்ட முக்கியமான நிகழ்ச்சியை அழித்துவிட்டோமே என்று சிந்திக்கவேண்டியதில்லை. காரணம் இந்தப் புதிய **VCR** இல் கணினிகளில் அமைக்கப்பட்டிருப்பது போன்று நிரந்தரமான ஹார்ட்டிறைவ் (**Hard Drive**) ஒன்று உள்ளது.

அது நிகழ்ச்சியின் ஏழு மணித்தியால நிகழ்வைப் பதிவு செய்யக்கூடியது. அதனால் பார்க்கத்தவறிய நிகழ்வை இலகுவாக மீண்டும் பார்க்கலாம். பார்க்கத்தவறிய நிகழ்வை மீளப்பெறும்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகள் தொடர்ந்தும் பதிவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும்.

இப்படியாக பல புதிய தொழில்நுட்பங்களுடன் வெளிவந்திருக்கின்றது. (**Replay Television) R - TV** என்று அழைக்கப்படும் நவீன **(Video Cassette Recorder) VCR** ஆகும்.

இன்று இந்த **VCR** ஆனது (1999 இல்) 995 அமெரிக்க டொலராகும். அப்படியானால் இலங்கை விலையில் சிந்தித்துப் பாருங்களேன். சுமார் எட்டு, ஒன்பது இலட்சம் வருமல்லவா? வேண்டிப்பாருங்களேன்.

நீங்கள் கொள்வனவு செய்யவும் இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற ஆவலாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படியாயின் மேலும் நல்ல தகவல்களைப் பெற. **www.replaytv.com** என்ற இணையப் பக்கத்தில் (**website**) இணைந்துகொள்ளுங்கள்.

ஏற்கனவே குரலை அடையாளம் காண இருந்த மென்பொருட்களானது, மேன்மேலும் வளர்ச்சிகண்டு வருகின்றது. இதற்கு முன்னர் இருந்த மென்பொருட்கள் போன்றில்லாமல் **IBM** நிறுவனத்தால் வெளியிடப்பட்ட வியாவொயிஸ் (**Viavoice**) மற்றும் டிறாகொன் (**Dragon**) நிறுவனத்தால் வெளியிடப்பட்ட **Naturally Speaking** போன்ற மென் பொருட்கள் தொடர்ச்சியாகப் பேசக்கூடியதை இனம் கண்டு கொள்ளக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னர் இந்த மென்பொருட்கள் ஆறுதலாகப் பேசினால் மட்டுமே குரலை இனங் கண்டு கொள்ளக்கூடிய ஆற்றலுடன் இருந்தன. இப்போது இந்த மென்பொருட்களால் நிமிடத்துக்கு 160 சொற்களை இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மென்பொருட்களைப் பாவிப்பதன் முதற்படியாக எமது குரலை அது நல்லமுறையில் அடையாளம் கண்டு கொள்வதற்காகச் சில விடயங்களைச் செய்யவேண்டியிருக்கின்றது.

உதாரணமாக கணினி திரையில் இருக்கும் ஒரு பந்தியை ஒலி வாங்கியினூடாக அரைமணிநேரம் வாசிப்பதன் மூலம் மென்பொருளானது எமது குரலுக்குப் பரிச்சயப் படுத்தப்படுகின்றது.

எனினும், முழுமையான பழக்கப்படுத்தலுக்குச் சில காலம் எடுக்கும். அதன் பிறகு எமது குரலை மிக இலகுவாக அடையாளம் காணக்கூடியதான ஆற்றலை இந்த மென்பொருள் பெற்றுவிடும்.

சொற்களை பதிவு (**Type**) செய்ய விரும்பாதவர்களுக்கு இந்த முறையானது பெரும் உதவியாக அமைகின்றது. குறிப்பாக பதிவுசெய்யும் வசதியற்ற ஊனமுற்றவர்கள் இதனால் பெரும் நன்மை அடைகின்றனர்.

அதேநேரம், சொற்களைப் பதிவு செய்வது சாத்தியமில்லாத சமயங்களில் இந்தக் குரலை அடையாளம் காணும் மென்பொருட்களின் பயன்பாடு இன்றியமையாததாகின்றது.

உதாரணமாக குற்றம் நடக்கின்ற இடங்களில், குறிப்புக்களை பதிவுசெய்வதற்கு காவல்துறையினருக்கு இது பயனுள்ளதாக அமைகின்றது.

மேலும், முதுமை காரணமாகவும், கைகளால் எழுதமுடியாத நரம்புத்தளர்ச்சி நோய் உள்ளவர்களும் இதனைப் பாவிக்கலாம்.

அத்தோடு, மேலும் இது வளர்ச்சியடைந்து வங்கிப் பழக்கவழங்கங்களை இலகுவாக்கி வாடிக்கையாளருக்கு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக தானியக்கப் பணம் பெறுவதில் உள்ள கையால் இயக்கும்முறை மாறி, வாயால் பேசுவதன் மூலம் பணத்தினைப் பெறக்கூடிய முறையும் வெகுவிரைவில் வந்துவிடலாம். என்ன சிந்திக்கிறீர்கள். இனியெல்லாம் கொண்டாட்டம்தான்.

# சர்வதேச கட்டணங்கள் இல்லாமலேயே உலகெங்கும் உரையாட இணையுங்கள்

## இணையத் தொலைபேசியுடன்

இணையம் ஊடாகப் பேசுவது இன்ரனெற் ரெலிபோனி (Internet Telephony) என்று அழைக்கப்படுகிறது. இந்த முறையில் பேசுவதன் மூலம் ஏற்படும் செலவானது சாதாரண தொலைபேசிக் கட்டணத்தைவிட மிகவும் இலாபமானதாகும்.

இணையத்தில் தகவல்கள் அனுப்புவதும், பேசுவதும் எப்போதுமே இலவசமானது. ஆயினும், இணைய இணைப்பினை உங்களுக்குத் தரும் இணையச் சேவை வழங்குநர்க்கு நீங்கள் மாதாந்தம் கட்டணம் செலுத்தவேண்டும்.

இணையத் தொலைபேசியானது செலவு குறைவானதென்றால் ஏன் நாங்கள் எங்கள் தொலைபேசிக்கு வீணாக பணத்தைச் செலவு செய்கின்றோம் என்ற கேள்வி எழலாம். இதற்காக நாம் இணையத் தொலைபேசி எவ்வாறு தொழிற்படுகிறது என்பதையும், அதனுடைய தரம் எப்படி என்பதையும் இந்த வசதியைப் பாவிப்பதற்கு என்னென்ன அவசியம் என்பதையும் பார்க்கவேண்டும்.

இணையத் தொலைபேசியைப் பாவிப்பதற்கு உங்களிடமும் நீங்கள் தொடர்பு கொள்பவரிடமும் இணைய (Internet) இணைப்புக்கள் உள்ள கணினி (Computer) இருத்தல்வேண்டும்.

இத்துடன் ஒரு ஒலிபெருக்கியும் (Speaker), ஒலிவாங்கியும் (Micro Phone) அவசியமாகும். இந்தத் தொலைபேசி வசதியை பயன்படுவதற்கு ஒரு மென்பொருள் அவசியம்.

இந்த மென்பொருளை இணையத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். பல்வேறு கணினி நிறுவனங்கள் இந்த மென்பொருளை இலவசமாக வழங்குகின்றன. இவற்றில் Netscape - Cooltalk, Microsoft - Netmeeting, Vocaltec - Internet Phone போன்றவை பிரபலமானவை.

இந்த மென்பொருட்களை கணனியில் பதிவுசெய்ததும் நீங்கள் இணையத் தொலைபேசியை பாவிக்கமுடியும். இத்துடன உங்களிடம் கணினி விடியோக் கமரா இருக்குமானால் உங்களை மற்றவர்கள் பார்க்க கூடியதாக இருக்கும்.

உங்களை மற்றவர்கள் பார்ப்பதுபோல் நீங்களும் அவர்களைப் பார்த்துக்கொள்ளலாம். நெற்மீற்றிங்கை (Net meeting) நீங்கள் திறக்கும்போது, அடுத்த பக்கத்திலுள்ள படம் உங்கள் கணினித் திரையில் தோன்றும்.

சேவர்ஸ் (Servers) என்ற பகுதியிலுள்ளவை, நீங்கள் உங்கள் பேச்சை ஆரம்பிப்பதற்கு தேவையான மையங்களைக் காட்டும். அவற்றில் ஒன்றைத் தேர்வு செய்தால், அந்த மையத்தைப் பாவித்து பேசிக்கொண்டிருப்பவர்களின் விபரங்களை அது காட்டும்.

நீங்கள் அவர்களில் ஒருவருக்கு உங்களுடன் பேசவருமாறு அழைப்பு விடுக்கலாம். அவர் உங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டால் நீங்கள் உரையாடலாம்.

நாம் பாவிக்கும் பாரம்பரிய தொலைபேசியானது பேச்சுப் பரிவர்த்தனைக்காகவும், இணையமானது தகவல் பரிவர்த்தனைக்காகவும் வடிவமைக்கப்பட்டது. சாதாரண தொலைபேசி போலல்லாது இணையம் ஊடாக அனுப்பப்படும் தகவலானது பல பாகங்களாகப் பிரிக்கப்படும்.

எல்லாப்பாகங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் பல வழிகளில் தமது இலக்கைச் சென்றடையும். இலக்கை அடையும்போது, சில வேளைகளில் இப்பாகங்கள் தகவல் அனுப்பப்பட்ட ஒழுங்கில் இருந்து மாறுபட்டுககூட இருக்கலாம்.

தகவல்களை மீண்டும் சரியாகப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பாகங்களும் இலக்கமிடப்பட்டிருக்கும். இவ் இலக்கங்களின் அடிப்படையில் இந்தப் பாகங்கள் கணினியால் ஒன்றுசேர்க்கப்பட்டு அனுப்பப்பட்ட தகவல் சரியான ஒழுங்கில் பெறப்படும்.

இந்த முறையை எமது பேச்சை அனுப்புவதற்குப் பயன்படுத்தமுடியாது. பேச்சானது தொடர்ந்து மற்றவர்களுக்கு கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். நாம் பேசுவதை பலபாகங்களாகப் பரித்து அனுப்பும்போது அதில் ஒரு பாகம் மறுமுனையை சென்றடையாது விட்டால் அந்தப் பாகத்திற்காக காத்திருக்க முடியாது.

இவ்வாறு பாகங்கள் ஒழுங்காகச் செல்லாதுபோனால், தரமான, தெளிவான ஒலியை நாம பெறமுடியாமல் போவதுடன. ஒருவரின் குரலை அடையாளம் காணமுடியாமலும் போய்விடும்.

இணையத்தைப் பாவித்து இன்னொருவருடன் பேசிக்கொள்வதற்கு இருபுறமும் கட்டாயமாக இணையத் தொடர்புள்ள கணினிகள் இருக்கவேண்டிய அவசியமில்லை. கணினி தொலைபேசிக்கு என்று வடிவமைக்கப்பட்ட விசேட தொலைபேசியாகக்கூட இருக்கலாம்.

இந்தவகைத் தொலைபேசிகளுக்கு உதாரணமாக Aplio phone என்பதைக் குறிப்பிடலாம்.

இந்த இன்ரநெற் ரெலிபோன் முறையானது பாரம்பரிய தொலைபேசிக்குச் சவாலாகவோ அல்லது ஒரு மாற்றீடாகவோ அமையுமா என்ற வினாவிற்கு - இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ஏன் தெரியுமா? இதனை இன்ரநெற்ரை ஏற்கனவே வைத்திருப்பவர்கள்தான் பாவிக்கலாம். ஆனால், இன்ரெநெற் ரெலிபோனிக்காக (internet -Telephony) மட்டும் கணனி (computer) வாங்கி இணைய இணைப்பினைப் பெறுதல் என்பது சதாரண தொலைபேசிக் கட்டணத்தைவிட விலைகூடிய தொன்றாகவே இருக்கும்

இணையத் தொலைபேசி இல்வசத் தொ(ல்)லை பேசி - இனையுங்கள்.

## துரோகங்களும் துக்கோற்பத்திகளும் காக்கை வன்னியன் முதல் கருணாவரை

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி தந்தை செல்வா மறைந்தார். இதன் பின் தமிழ்மக்களுக்குச் சரியான நாடாளுமன்றத் தலைமை கிடைக்கவில்லை. "தமிழ்மக்கள் மத்தியில் தம்மைப் பெரும் தளபதியாகக் காட்டிக்கொண்டவர்கள் - பின்னர் தம்மை நம்பிய மக்களை என்றோ ஒருநாள் காட்டிக்கொடுத்து கைவிட்டுப் போனதே நாடாளுமன்ற அரசியல் தலைமைகளின் வரலாறு " என ஒருமுறை தந்தை செல்வா குறிப்பிட்டார். இந்த நிலைமை தந்தைசெல்வாவின் மறைவுக்குப் பின்னர் வடக்கிலும் ஏற்பட்டது. மிதவாத அரசியல் தலைமைகளின்மீது மக்கள் வெறுப்படைந்தனர். நாடாளுமன்ற அரசியல் புறம்தள்ளப்பட்டது. போராட்ட அரசியல் முன்னிலைப்படலாயிற்று. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் விடுதலைப் போராட்டமாகப் பரிமாணம் பெற்றது.

### போராட்ட அரசியலில் தமிழ்த் துரோகிகள்

இலங்கையில் தமிழ் போராட்ட அரசியல் நடவடிக்கைகள் 1970 ஆம் ஆண்டுகளில் முளைவிடத்தொடங்கின. பல அரசியல் தீவிரவாத அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. 1970 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாராநாயக்க அரசினால் அமுல்படுத்தப்பட்ட உயர் கல்விக்கான இன அடிப்படையிலான தரப்படுத்தல்முறையும், 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பும் - தமிழ் பேசும் மக்கள் மீதான இன ஒடுக்குமுறையின் புதிய வடிவங்களாயின. தீவிர அரசியல் முன்னெடுப்பாக 1972 ஆம் ஆண்டு புதிய தமிழ்ப்புலிகள் (T.N.T) என்ற அமைப்பை வே.பிரபாகரன் உருவாக்கினார்.

இயக்கச் செயற்பாடுகளுக்குத் தேவையான பணத்தை சிறிலங்கா அரசின் வங்கிகளிடமிருந்து பறித்து எடுத்தல், எதிரிகள் மீதான தாக்குதல்களை ஆங்காங்கே மேற்கொள்ளல், கொரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தேவையான தயாரிப்புக்களுக்குரிய உள்ளீடுகளையும் இரசாயனப் பொருட்களையும் சேகரித்தல், போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் கயமைத்தனத்திற்கெதிரான செயற்பாடுகளை விசாரித்தல் எனப்பல பரிமாணங்களில் போராட்டம் படிப்படியாக ஆனால், உறுதியாக விஸ்தீரணம் பெறலாயிற்று.

### போராட்ட அமைப்பில் முதல் தமிழ்த் துரோகி

வே.பிரபாகரனோடு இணைந்து அக்கால கட்டத்தில் இளைஞர் சமூகம் செயற்பட்டுக்கொண்டிருந்தவேளையில்தான், தீவிர அமைப்பில் ஒரு முக்கிய நபர் துரோகியாக உருவாகி இயக்கத்தின் ஒழுக்க நெறிகளையும், இறுக்கமான கட்டுக்கோப்புகளையும் புறக்கணித்து, புறம்தள்ளி சுயஇலாபத்திற்காகச் செயற்பட்டதோடு, பேரினவாதப்படைகளுக்குக் காட்டிக்கொடுக்கும் ஈனத்தனமான செயலிலும் ஈடுபடலானார். அவர்தான் செட்டி என்று அழைக்கப்பட்ட தனபாலசிங்கம் என்பவர். இவர் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர். இவர் 16.03.1981 அன்று காட்டிக்கொடுப்பிற்குரிய தண்டணையைப் பெற்றார். இவர் மீதான நடவடிக்கைக்கு முன்பதாக விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் செல்லக்கிளி அம்மானுடன் (கல்வியங்காடு) இது தொடர்பாக கதைத்தபோது - செல்லக்கிளி அம்மான் சொன்னார் - "என்ன முடிவை தலைமைப் பீடம் எடுக்கின்றதோ அதை ஏற்றுக்கொள்வேன்" என்றார்.

ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்கும்போதுதான், ஒரு விடுதலை இயக்கம் கட்டுக்கோப்பாகச் செயல்படமுடியும். செல்லக்கிளி, கிட்டு போன்ற தலைவர்களிடம் காணப்பட்ட அரியபண்பு இது. இது போன்ற பண்பு விடுதலைப் புலிகளின் மறைந்த தளபதிகள், துணைத்தளபதிகள் பலரிடமும் மிகுந்து காணப்பட்டது. எந்தவொருவிடயமானாலும் "அண்ணையிடம் கேட்டுத்தான் முடிவு எடுக்க வேண்டும்" என்பது அவர்களது வாயில் சர்வசாதாரணமாகக் கூறப்படும் வார்த்தைகளாகவே இருந்தது. அதுவே தலைமைத் துவத்திற்கும் சிறப்பாகும்.

(தொடரும்)

# அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுப்பதற்கு ஐ.நா சபைக்கு தெரிவித்த காரணம் தவறாகும்

உலக நோக்கு

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல்



ஈராக்கின் மீது போர் தொடுப்பதற்கென ஐக்கிய நாடுகள் சபையில் தெரிவித்திருந்த காரணங்கள் தவறானவை என்பதை அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஆனால், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஈராக் உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான பரிசோதனைக் கூடங்களை உருவாக்கியிருந்ததாக தெரிவித்தார்.

அத்துடன், போருக்கு முன்னர் ஈராக்கில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் போர் தொடர்பாக ஆராய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அமெரிக்காவில் உள்ள புத்திஜீவிகள் இந்தப் போருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனரா என்பதை ஆராயவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

ஈராக்கில் பேரழிவைத் தரவல்ல ஆயுதங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு டேவிற் கே தலைமையில் ஐ.நா சபையால் குழு அமைக்கப்பட்டிருந்தது. இக் குழுவினர் ஈராக்கில் அவ்வாறான ஆயுதங்கள் காணப்படவில்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் முதற்தடவையாக கிடைக்கப்பெற்ற சான்றுகளின் மூலம் போர் தொடுத்தது தவறென்பதை கொலின் பவல் ஒப்புக்கொண்டுள்ளதாக பி.பி.ஸியின் ஜானட் ஜெலில் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்தின் மீதுள்ள நம்பிக்கைத் தன்மையை பொலின் பவலின் கூற்று - தேர்தல் சமயத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சென்ற மாதம் கொலின் பவல் ஆணைக்குழுவொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது புஷ் நிர்வாகம் அல் - கொய்டா, அதன் தலைவர் பின் லாடன் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களைப் புறக்கணித்திருந்தார் என்ற கூற்றினை மறுத்திருந்தார்.

## பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் 5 பொலிஸாரை சுட்டுக்கொன்றனர்

(கராச்சி)

பாகிஸ்தானின் தென்பகுதியான கராச்சியில் பொலிஸ் நிலையமொன்றில் பிரவேசித்த துப்பாக்கிதாரிகள் 5 பொலிஸாரை கொலைசெய்துள்ளனர். விமான நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள சிறிய பொலிஸ் நிலையமொன்றில் அதிகாரிகள் காலைவேளை பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வேளையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஏ.எவ்.பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள் பதில் தாக்குதலை மேற்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றவர்கள் கார் ஒன்றில் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தின் போது 10 இற்கு மேற்பட்ட துப்பாக்கிதாரிகள் எந்தப் பொலிஸ் அதிகாரியையும் உயிருடன் விடப்போவதில்லை எனக் கூக்குரலிட்ட வண்ணம் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தின் பின் இறந்த தமது உறுப்பினரையும் எடுத்துக் கொணடு இவர்கள் தப்பிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஸ்பெயின் படையினர் தாக்குதல் 8 ஈராக்கியப் பொதுமக்கள் பலி!



(பக்தாத்)

ஈராக்கிய நகரான நஜாப்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்பெயின் படையினரின் முகாமொன்றை நோக்கி நகரமுற்பட்ட வேளையில், ஸ்பெயின் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் வரை கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினரை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை எறிந்துள்ளனர்.

ஆப்பாட்டக்காரர்கள் பயர் பிரான்ட் சியா மதத்தின் உதவியாளர் ஒருவரின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

மேலும், இந்த முகாமில் எல்சல்வடோர் மற்றும் ஸ்பெயின் மொழி பேசும் துருப்பினர் தங்கியிருந்தனர்.

இதேவேளை, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 என அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. இதில் ஈராக்கியப் பொலிஸாரும் காயப்பட்டுள்ளதாகவும், இதனால் முதலில் துப்பாக்கிப் பிரயோகத்தை யார் ஆரம்பித்தார்கள் என்பதைத் தெளிவாக அறிய முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களில் தடைசெய்யப்பட்ட மெடி போராளிக் குழுவைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர். இது தொடர்பாக ஸ்பெயின் படையினர் தெரிவிக்கும்போது - ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோல் எவரையும் கைதுசெய்யவில்லை எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஈராக்கின் அல் அன்பார் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தரப்பினர் நேற்றுத் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் தெரியாதெனவும் அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கடந்தவருடம் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை நடந்த தாக்குதல்களில் இதுவரை 459 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்பெயின் ரயில் குண்டுத்தாக்குதல் முக்கிய சந்தேக நபர் உயிரிழந்தார்



ஸ்பெயின் பொலிஸார் மேற்கொண்ட முற்றுகை ஒன்றில் - தற்கொலைத் குண்டுத்தாக்குதல் மூலம் நால்வர் உயிரிழந்தனர். இவர்களில் மட்ரிட் ரயில் குண்டுத் தாக்குதல் தொடர்பான குழுவின் தலைவரும் உயிரிழந்தவர்களில் ஒருவர் என ஸ்பெயின் உள்




துறை அமைச்சர் ஏன்சல் அசெமி தெரிவித்தார்.

துனிசியாவைச் சேர்ந்த சேர்கன் பென் என்பவரே கொல்லப்பட்ட தலைவராவார். இவருக்கெதிராக சர்வதேச நாடுகளில் கைதுசெய்வதற்கான உத்தரவு முன்னர் ஸ்பெயின் அரசினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த முற்றுகைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட பொலிஸ் படையினரே இந்த முற்றுகையை மேற்கொண்டிருந்தனர். மேலும் முற்றுகையை யன்னல் வழியாக கண்டுகொண்ட தீவிரவாதிகள் அராபிய சுலோகங்களை உச்சரித்த வண்ணம் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்த வேளையில் - பொலிஸார் அந்தக் கட்டிடங்களில் இருந்து முதலில் மக்களை வெளியேற்றியிருந்தனர். பொலிஸார் சந்தேகத்திற்கிடமானவர்கள் வசித்த கட்டிடத்தை அணுகிய வேளையில், பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. குண்டு வெடிப்பின்போது உடைந்த கண்ணாடிகள் வானத்தில் எல்லாப் பக்கங்களுக்கும் சிதறிப்பறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அயல் வீடுகளில் வசித்தவர்கள் தீவிரவாதிகளின் நடமாட்டம் தொடர்பாக தெரிவிக்கையில் வட ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் ஒரு மாதத்திற்கு முன் இந்த வீட்டில் குடியேறியிருந்ததாகவும் இவர்களைப் பார்க்க முடியாதவாறு யன்னல்களை திரைசீலைகளினால் மறைப்புக்களை ஏற்படுத்தியிருந்ததாகவும் தெரிவித்தனர்.

### முதல் சுற்றுக்காக நடத்தப்பட்ட

## ஸ்லோவாக்கிய ஜனாதிபதி தேர்தல் முன்னாள் பிரதமர் முன்னணியில்!



ஸ்லோவாக்கியாவின் முன்னாள் பிரதம மந்திரி விளாடிமிர் மேசியர் ஜனாதிபதித் தேர்தலில் முதல்சுற்றில் வெற்றிபெற்றுள்ளார்.

இவரது முன்னைய ஆட்சி மேற்கு நாடுகளினால் விமர்சிக்கப்பட்டிருந்தது. சட்டம், ஜனநாயகம் நன்கு பேணப்படவில்லை என மேற்கு நாடுகளினால் முன்னர் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய தேர்தலில் 32.7 வீத வாக்குகளை இவர் பெற்றுள்ளார். அடுத்ததாக இவான் கஷ்பரோவிஷ் 22.3 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார். இதனால் இருவரும் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றில் போட்டியிடவுள்ளனர்.

மேலும் வெளிநாட்டமைச்சர் எட்வாட் கூகன் பெரும்பான்மையுடன் வெற்றிபெறுவார் என முன்னர் கருதப்பட்டிருந்தது. முன்னர் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் 30 வீத வாக்குகளை இவர் பெற்றிருந்தார். ஆனால், தற்போது 22.1 வீத வாக்குகளையே பெற்றுள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தில் ஸ்லோவாக்கியா இணைந்துகொள்வதற்கு சில வாரத்துக்கு முன்னர் அந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது அதிக வாக்குப் பலத்துடன் காணப்படும் மேசியர் 1990 ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகிக்கத் தொடங்கி 1998 ஆம் ஆண்டு பதவியிலிருந்து வெளியேறினார். இவர் தனது பதவிக்காலத்தில் முதியோர்களுக்கு பல சலுகைகளை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கேகாலை மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ☆ | ஐ.ம.சு.முன்னணி | - | 214 267 | 5 |
| ☆ | ஐ.தே.க | - | 186 641 | 4 |
| ☆ | ஜாதிக ஹெல உறுமய | - | 18 034 | 0 |
| ☆ | தே.அபி.முன்னணி | - | 488 | 0 |
| ☆ | ஐ.சோ.கட்சி | - | 487 | 0 |
| ☆ | ஐ.மு.ம.முன்னணி | - | 356 | 0 |
| ☆ | புதிய இடதுசாரி முன்னணி | - | 307 | 0 |
| | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | ~ | 446 816 | |
| | நிராகரிக்கப்பட்டவை | ~ | 25 685 | |
| | செல்லுபடியான வாக்குகள் | ~ | 421 131 | |
| | மொத்த வாக்காளர் தொகை | ~ | 570 229 | |

### மொனறாகலை மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ☆ | ஐ.ம.சு.முன்னணி | - | 117 456 | 3 |
| ☆ | ஐ.தே.க | - | 71 067 | 2 |
| ☆ | ஜாதிக ஹெல உறுமய | - | 2 675 | 0 |
| ☆ | ஐ.ல.முன்னணி | - | 275 | 0 |
| ☆ | தே.அபி.முன்னணி | - | 158 | 0 |
| ☆ | ஐ.சோ.கட்சி | - | 135 | 0 |
| | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | ~ | 204 929 | |
| | நிராகரிக்கப்பட்டவை | ~ | 12 816 | |
| | செல்லுபடியான வாக்குகள் | ~ | 192 113 | |
| | மொத்த வாக்காளர் தொகை | ~ | 262 742 | |

### புத்தளம் மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ☆ | ஐ.ம.சு.முன்னணி | - | 142 784 | 5 |
| ☆ | ஐ.தே.க | - | 135 152 | 3 |
| ☆ | ஜாதிக ஹெல உறுமய | - | 10 000 | 0 |
| ☆ | தே.அபி.முன்னணி | - | 785 | 0 |
| ☆ | ஐ.மு.ம.முன்னணி | - | 229 | 0 |
| ☆ | புதிய இடதுசாரி முன்னணி | - | 169 | 0 |
| ☆ | ஐ.சோ.கட்சி | - | 132 | 0 |
| ☆ | சுயேட்[illegible] | - | 116 | 0 |
| | அளி[illegible] வாக்குகள் | ~ | 311 194 | |
| | நிரா[illegible] | ~ | 21 431 | |
| | செல்[illegible] | ~ | 289 763 | |
| | மொத்[illegible] | ~ | 450 057 | |

### மாத்தறை மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ☆ | ஐ.ம.சு.முன்னணி | - | 241 235 | 5 |
| ☆ | ஐ.தே.க | - | 139 633 | 3 |
| ☆ | ஜாதிக ஹெல உறுமய | - | 16 229 | 0 |
| ☆ | ஐ.சோ.க | - | 1 526 | 0 |
| ☆ | தே.அபி.முன்னணி | - | 718 | 0 |
| ☆ | சுயேட்சை 07 | - | 245 | 0 |
| ☆ | புதிய இடதுசாரி முன்னணி | - | 192 | 0 |
| ☆ | சுயேட்சை 06 | - | 117 | 0 |
| | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | ~ | 423 002 | |
| | நிராகரிக்கப்பட்டவை | ~ | 22 769 | |
| | செல்லுபடியான வாக்குகள் | ~ | 400 233 | |
| | மொத்த வாக்காளர் தொகை | ~ | 550 506 | |

### காலி மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ☆ | ஐ.ம.சு.முன்னணி | - | 306 385 | 6 |
| ☆ | ஐ.தே.க | - | 209 399 | 4 |
| ☆ | ஜாதிக ஹெல உறுமய | - | 22 826 | 0 |
| ☆ | ஐ.ல.முன்னணி | - | 674 | 0 |
| ☆ | தே.அபி.முன்னணி | - | 626 | 0 |
| ☆ | புதிய இடதுசாரி முன்னணி | - | 457 | 0 |
| ☆ | ஐ.சோ.கட்சி | - | 456 | 0 |
| ☆ | சுயேட்சை 09 | - | 164 | 0 |
| ☆ | சுயேட்சை 01 | - | 121 | 0 |
| | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | ~ | 571 891 | |
| | நிராகரிக்கப்பட்டவை | ~ | 30 380 | |
| | செல்லுபடியான வாக்குகள் | ~ | 541 511 | |
| | மொத்த வாக்காளர் தொகை | ~ | 716 709 | |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஏக பிரதிநிதிகளாக புலிகளுடன் பேசுவதை நிராகரிக்கிறோம்!

## ஜே.வி.பியின் முக்கியஸ்தர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தாங்கள் நிராகரிப்பதாக ஜே.வி.பியைச் சேர்ந்த சந்திரசேகரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதானப் பேச்சுவார்த்தைகளை சகல தரப்பினருடனும் கலந்தாலோசித்து முன்னெடுத்துச் செல்லும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பேச்சுவார்த்தை ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற மிகத் தெளிவாகக் கூறியிருந்தது.

அத்துடன் தாம் யுத்தத்தை நிராகரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்கில் மீண்டும் தேர்தலுக்கு உத்தரவிடுமாறு

# டக்ளஸ் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரிப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்து மீண்டும் தேர்தலை நடத்த முடியாதென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று கட்சித் தலைவர்களைச் சந்தித்து தேர்தல் நிலைமைகள் குறித்து ஆராய்ந்த பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறி தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்து புதிய தேர்தலை நடத்துமாறு டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக போதிய ஆதாரம் இல்லாமையால், மீண்டும் தேர்தலை நடத்த முடியாது. அத்துடன், தேர்தலை இரத்துச் செய்து புதிய தேர்தலுக்கு உத்தர விடுவதற்கு போதிய அதிகாரங்கள் எனக்கு இல்லை.

வேண்டுமானால், தேர்தலை இரத்துச் செய்யுமாறு டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தை நாடலாம். அதற்கு தேர்தல் திணைக்களம் ஆவணங்களை வழங்கி உதவத் தயாராக இருக்கிறது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கட்சிகள் பெற்ற வாக்குகளும் மொத்த ஆசனங்களும்

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள் தொடர்பான இறுதி முடிவை நேற்று மாலை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்தது. இதன் முழுவிவரமும் வருமாறு -

| கட்சிகள் | வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4,223,970 | 45.60% | 105 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,504,200 | 37.83% | 82 |
| தமிழரசுக்கட்சி | 633,654 | 6.84% | 22 |
| ஹெல உறுமய | 552,774 | 5.97% | 09 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 186,876 | 2.02% | 05 |
| மலையக மக்கள் முன்னணி | 49,728 | 0.54% | 01 |
| ஈ.பி.டி.பி. | 24,955 | 0.27% | 01 |
| தே.அ.மு | 14,956 | 0.16% | |
| ஐ.சோ.க. | 14,660 | 0.16% | |
| இ.ஜ.ஐ.மு. | 10,736 | 0.12% | |
| புதிய இடதுசாரி முன்னணி | 8,461 | 0.09% | |
| புளொட் | 7,326 | 0.08% | |
| ஐ.மு.ம.கா. | 3,779 | 0.04% | |
| ஐ.ல.மு | 3,773 | 0.04% | |
| தே.ம.க. | 1,540 | 0.02% | |
| பூமிபுத்ர கட்சி | 1,401 | 0.02% | |
| சுவராஜ்ய | 1,136 | 0.01% | |
| இ.மு.மு. | 814 | 0.01% | |
| றுகுணு மக்கள் கட்சி | 590 | 0.01% | |
| இ.தே.மு. | 493 | 0.01% | |
| லிபரல் கட்சி | 413 | 0.00% | |
| இ.மு.க. | 382 | 0.00% | |
| சோ.ச.க. | 159 | 0.00% | |
| ஜ.ஐ.தே.மு. | 141 | 0.00% | |

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 12,899,038 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 9,797,680 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 534,948 |
| செல்லுபடியான வாக்குகள் | 9,262,732 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 9,262,732 |

# தென்னிலங்கை அரசியல் நகர்வுக்கேற்ப கூட்டமைப்பு உறுப்பினர்கள் செயற்படுவர்!

## யாழ். அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

தற்போதைய தென்னிலங்கை அரசியல் நகர்வுகளை அவதானித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் செயற்படுவார்கள் என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட யாழ்.மாவட்ட வேட்பாளர் அனைவரையும் சந்தித்த பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், கூட்டமைப்பில் போட்டியிட்ட 12 வேட்பாளர்களில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுந்தையா சுரேஷ் பிரேமச்சந்திரன், கிட்டினன் சிவநேசன், நடராஜா இரவிராஜ், கனகலிங்கம் சிவாஜிலிங்கம், சோமசுந்தரம் சேனாதிராசா ஆகியோருக்கான பாராட்டு நிகழ்வே இடம்பெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர்.

தமிழ்மக்களின் வாக்குறுதிகளை, அபிலாசைகளை வெளிப்படுத்த உறுதிப்பாட்டுடன் இவர்கள் செயற்படுவர்.

தற்போதைய தென்னிலங்கை அரசியல் நகர்வுகளை அவதானித்து கூட்டமைப்பினர் முடிவுகளை எடுத்துச் செயற்படுவர். மிகவிரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் கூட்டமைப்பினர் சந்திப்பொன்றை நடத்தி அடுத்த கட்ட செயற்பாடு எதுவென ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்கவுள்ளனர்.

மக்களுடன் எப்போதும் ஒன்றிணைந்தவர்களாக இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்களுடைய தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு இலகுவான வழிமுறைகள் செய்யப்படவுள்ளன.

இதனூடாக மக்கள் இலகுவாக இவர்களுடன் தொடர்புவைத்துக் கொள்ளமுடியும் என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மேலும் கருத்துத் தெரிவித்தார்.

## வீதி விபத்தொன்றில் நாட்டுப் பற்றாளர் சாவு

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டம் வவுனியா கோட்டதத்தில் வீதி விபத்தொன்றில் கடந்த 2 ஆம் திகதி நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்தார்.

நடேசதுரை என அழைக்கப்படும் நுணாவில் - சாவகச்சேரியைச் சொந்த முகவரியாகவும், இல.114, 30 வீட்டுத்திட்டம், உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை தற்போதைய முகவரியாகவும் கொண்ட ஆறுமுகம் நடேசதுரை என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

## ஈ.பி.டி.பியினர் தாக்கி ஒருவர் காயமடைந்தார்!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை - கரச்சி, கொச்சிக்குளத்தைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை ரஞ்சித்குமார் என்பவரது வீட்டுக்குள் நுழைந்து ஈ.பி.டி.பியினர் நேற்றிரவு தாக்குதல் நடத்தியதாகவும், இந்தச் சம்பவத்தின்போது காயமுற்ற மேற்படி நபரை ஊர்காவற்றுறை பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பியிருப்பதாகவும் அரசியற்துறையினரால் நேற்றிரவு அனுப்பிய செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இடைக்கால சுயாட்சி அமைப்பு வட-கிழக்கில் அமையவேண்டும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் ஓர் இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபில் உள்ள அதிகாரங்கள் எதிர்கால அரசால் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

இவ்வாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு இணைவது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. இருந்தபோதிலும் இது பற்றி யோசிப்போம். ஆனால எங்கள் கொள்கையின் அடிப்படையில் தான் செயற்படுவோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்று அரசு அமைப்பவர்கள் கூறியிருப்பதையும் நாங்கள அலசி ஆராய்ந்ததோடு முன்புபோல் இலகுவாக ஏமாறமாட்டோம் என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## புதிய பிரதமராக கதிர்காமர்...

சார்பில் பிரதமராக நியமிக்கப்படக்கூடும் என எதிர் பார்க்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுடனும், ஜே.வி.பியுடனும் இது குறித்து ஆராயப்பட்டது.

இதன்பின்னரே இன்று கதிர்காமர் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்க ஆறுமுகன் தொண்டமான் இணக்கம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்று மாலை ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து ஆதரவு வழங்குவது குறித்து பேச்சு நடத்தியதாகத் தெரியவருகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் இன்று ஜனாதிபதி முன்னிலையில் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் என்ற செய்தியை ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தவில்லை.

புதிய பிரதமர் பதவியேற்ற பின்னர் - எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் தமது அரசியல் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்காக தற்போது சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டு அமைப்பதற்கான பேச்சுக்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் நடத்தி வருகின்றனர் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடற்படையினரின்...

வழியிலேயே இந்த மீனவர் மரணமானார் என, பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மீனவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் படகும், மற்றைய மீனவர்களும் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## ஐக்கிய முன்னணி...

விடயங்களில் கவனமாக உள்ளது. எனவே எமது அரசாங்கம் சகல வழிகளிலும் இந்தியாவுடன் ஒத்துழைப்பை மேற்கொள்ளும் என பீரிஸ் தெரிவித்தார்.

## புலிகளே ஏக பிரதிநிதிகள்...

உறுதியாக எடுத்துக் கூறியுள்ளனர் விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ், தமிழ்மக்கள் எவ்வித பேதங்களுமின்றி ஒன்றுபட்டு ஒற்றுமையாக நிற்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்தோடு, தமிழர் தாயகம், தமிழர்தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை ஆகிய தமிழீழ தேசிய இனத்தின் மூலாதார கோரிக்கைகளை ஏற்று, அவற்றின் அடிப்படையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையும், இல்லாது விடின் தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையை நிலைநிறுத்தப் போராடுவோம் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

தமிழீழ தனியரசை அமைக்குமாறு 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களித்த பின்னர், தமிழ்மக்கள் இந்தத் தேர்தலில் தான் மிகப்பெரிய அளவில் எழுச்சிபெற்று, தமிழ்த் தேசிய உணர்வோடு தமது அபிலாஷைகளையும், விருப்பங்களையும் மிகவும் உறுதியாக தீர்க்கமான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இதன்மூலம் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தவோ, அசட்டை செய்யவோ முடியாதவாறு அதனைத் தூக்கி நிறுத்தியுள்ளனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளை, ஓர் பலம் மிக்க வலுவான மக்கள் சக்தியாக உலகிற்கு மீளவும் நிரூபித்துள்ளார்கள். இது எமது போராட்ட முன்னெடுப்புக்குக் கிடைத்த மாபெரும் அரசியல் வெற்றி.

இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித்தந்த தமிழ்மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழீழ தேசியத் தலைவர் சார்பாகவும் எமது அமைப்பின் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு, தமிழ்மக்களின் பாதுகாப்புக்காகவும், சுதந்திர வாழ்வுக்காகவும் அயராது போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைத்துவத்தினது அரசியல் போராட்ட முன்னெடுப்புக்கும் பக்கத்துணையாக இருந்து செயற்படவுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் தொடர்ந்து உங்கள் நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிச் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள்...

டொக்டர் ஜயலத் ஜயவர்த்தன 8205 வாக்குகளால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பீலிக்ஸ் பெரேராவிடம் தனது ஜாஎல தொகுதியில் தோல்வியடைந்தார்.

சுரநிமல ராஜபக்ஷ தனது சொந்தத் தொகுதியான பியகம தேர்தல் தொகுதியில் தோல்வியடைந்த அதே வேளை, முன்னர் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ஜோன்சன் பெர்ணாண்டோ கட்டான தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒலித பிரேமரத்னவிடம் தோல்வியடைந்தார்.

அத்துடன் சரத்சந்துர ராஜகருணா தொம்பே தொகுதியிலும, எச்.ஜி.பி நெலசன் பொலனறுவைத் தேர்தல் தொகுதியிலும் தோல்வியடைந்தனர். பொலநறுவையிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 10516 வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளது. இதே வேளை முன்னர் பொதுஜன முன்னணியில் உறுப்பினராக இருந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த அத்துல நிமல சிறிஜெயசிங்க மகரத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்தத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20546 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனாலும் ஜோன் அமரதுங்க மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா இருவரும் தாம் போட்டியிட்ட வத்தளை மற்றும் நீர்கொழும்புத் தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்தியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த முறை ஒன்பது இடங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆறு இடங்களையுமே பெற்றுள்ளன.

இதன் மூலம் இந்தமுறை இந்த மாவட்டத்தில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய புள்ளிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அஷ்ரப்பின் முக்கிய கோட்டையாக கருதப்பட்ட சம்மாந்துறையை ரவூப் ஹக்கீம் இழந்துள்ளார். இதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்[illegible]டன் இணைந்து போட்டி[illegible] பெற்றுக்[illegible] குறிப்பிடத்[illegible]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் [illegible]பட்டது.